விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 07 வெள்ளிக்கிழமை (19.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 062

## அகிம்சை பேரணியில் கலந்து கொண்டோர் மீதான நடவடிக்கை ஜனநாயக இடைவெளியை அதிகமாக்கும்

### மக்கள் பேரெழுச்சி இயக்கம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான தமிழ் மக்களின் அகிம்சை மக்கள் எழுச்சி பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பொலிஸார் விசாரணை செய்யும் நடவடிக்கைகளை கண்டிப்பதாக பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பேரெழுச்சி இயக்கத்தினர் மேலும் தெரிவித்ததாவது.

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை மக்கள் எழுச்சி போராட்டம் ஒன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத் 19

## யாழ்.மாநகரில் கொள்ளை ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரில் மூன்று இடங்களில் கொள்ளை மற்றும் திருட்டில் ஈடுபட்ட மூவர் உட்பட ஐவர் கைது செய்யப்பட் 19

## வல்லைப் பகுதியில் பெண் ஒருவரின் சங்கிலி அபகரிப்பு

(கரணவாய்)

வல்லைப் பகுதியில் பெண்ணொருவரின் தங்கச் சங்கிலி வழிப்பறி கொள்ளையர்களினால் கொள்ளையிட்டு செல்லப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 19

## பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு

# உரிய தீர்வை வழங்குவது ராஜபக்ஷ அரசின் பொறுப்பு

### எதிர்க்கட்சியினர் எடுத்துரைப்பு



(கொழும்பு)

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தை நீக்க அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுக்கின்றது. அனைத்து விடயங்களையும் அரசியல் கோணத்தில் கணிப்பதை அரசு முதலில் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வடக்கு - கிழக்கு மக்களும் நியாயம் கோருகிறார்கள். எனவே பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு உரிய தீர்வை வழங்குவது அரசின் பொறுப்பாகும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## சலூன் உரிமையாளருக்கு மன்னாரில் கொரோனா

(மன்னார்)

மன்னார் நகரில் சிகை அலங்கரிப்பு நிலையம் (சலூன்) நடத்தும் நபர் ஒருவருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 19

## யாழ்.மாநகர முதல்வருடன் சுவிஸ் தூதுவர் சந்திப்பு



19

## கடுமையான கட்டுப்பாடுகளுடன் யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

### பட்டதாரிகளுக்கு மட்டுமே அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் 35ஆவது பட்டமளிப்பு விழாவை மாகாண சுகாதார பணிப்பாளர், யாழ். மாவட்ட செயலர் ஆகியோரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மிக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா 19

## காரைநகரில் 50 ஏக்கர் பொதுமக்களின் காணியை அபகரிக்க இன்று அளவீடு

### எதிர்க்க ஒன்றுபடுமாறு சிவில் அமைப்புக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.காரைநகரில் கடற்படையினரின் பயன்பாட்டிற்காக சுமார் 50 ஏக்கர் தனியார் காணிகளை சுவீகரிப்பதற்காக அளவீடு செய்யும் நடவடிக்கை இன்று இடம்பெறவுள்ள நிலையில் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு தீவக சிவில் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து மேலும் அவர்கள் கூறுகை 19

## தடுப்பூசி பெற்ற சிலருக்கு இலங்கையில் கொரோனா

### பதில் சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

கோவிட் - 19 தடுப்பூசி பெற்ற சிலருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பதில் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன தெரிவித்தார்.

ஒக்ஸ்போர்ட் - 19

## எழுச்சிப் பேரணியில் பங்கேற்ற இளைஞன்

### பருத்தித்துறையில் கைதாகி கடும் விசாரணையின் பின் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் 19

## இளம் குடும்பப் பெண் வரணியில் சடலமாக மீட்பு

(கரணவாய்)

தென்மராட்சி வரணிப் பகுதியில் 19



## மாட்டுடன் மோதுண்ட குடும்பஸ்தர் உயிரிழப்பு

### வல்லைச் சந்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீதியின் குறுக்கே சென்ற மாட்டுடன் மோதுண்டு படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கடந்த 24 மணித்தியாலங்களில் சுன்னாகம் உள்ளிட்ட 6 இடங்களில் மோட்டார் சைக்கிள் திருட்டு

(கொழும்பு)

யாழ். சுன்னாகம் உள்ளிட்ட 6 இடங்களில் கடந்த 24 மணித்தியாலங்களில் 6 மோட்டார் சைக்கிள்கள் திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாக கூறியிருக்கும், பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண,

குறித்த கொள்ளை சம்பவங்கள் அனைத்தும் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு கொள்ளை கும்பலினால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

கட்டான, சீனன்குடா, சுன்னாகம், புத்தளம், பொல்பித்திகமை, அனுராதபுரம் ஆகிய 6 இடங்களில் இந்த மோட்டார் சைக்கிள் திருட்டு இடம் பெற்றிருப்பதாக கூறியிருக்கும் பொலிஸ் பேச்சாளர் பொதுமக்கள் முன்னெச்சரிக்கையுடன் பாதுகாப்பாக இருக்குமாறும் கோரிக்கை விடுத்திருக்கின்றார். (ம-03)

# டுபாய் விமான சேவை மீண்டும் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இலங்கையுடன் விமானப் பயணங்களை தற்காலிகமாக இடை நிறுத்தியிருந்த டுபாய் விமான சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ப்ளை டுபாய் (Fly Dubai) விமான சேவையின் முதலாவது விமானம் 58 பயணிகளுடன் டுபாயிலிருந்து நேற்று அதிகாலை 12.50 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த விமானம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து 166 பயணிகளுடன் நேற்று அதிகாலை 1.50 மணிக்கு மீண்டும் டுபாய் நோக்கி புறப்பட்டது.

ப்ளை டுபாய் (Fly Dubai) விமான சேவை வாரத்திற்கு இரண்டு தடவை (செவ்வாய் மற்றும் வியாழன்) அதிகாலை டுபாயிலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு நேரடி விமான போக்குவரத்து சேவையை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் விமான நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ம-03)

# பிணைமுறி மோசடியை விசாரிக்க இரு நீதிமன்ற தீர்ப்பாயங்கள் நியமனம்

(கொழும்பு)

மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்து விசாரணை செய்ய இரு நீதிமன்ற தீர்ப்பாயங்களை அமைக்க தலைமை நீதியரசர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

சட்டமா அதிபரின் கோரிக்கைக்கு அமைய 2016 மார்ச் மாதம் இடம்பெற்ற மத்திய வங்கியின் பிணை முறி மோசடி வழக்குகள் குறித்து நீதிமன்ற தீர்ப்பாயங்களில் விசாரணைகள் இடம் பெறவுள்ளன.

அதன்படி, மேல் நீதிமன்ற நீதிபதிகளான டிதொடவத்த, எம். இரஸதீன் மற்றும் மஞ்சுள திலகரட்ன ஆகியோர் அடங்கிய ஒரு நீதிமன்ற தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி நிஷாரா ஜயரத்ன தெரிவித்தார்.

இரண்டாவது நீதிமன்ற தீர்ப்பாய நீதிபதிகள் குழாமில் மேல் நீதிமன்ற நீதியரசர் அமல் ரணராஜா, பலல்லே மற்றும் ஆதித்ய படபந்திகே ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-03)


## பணியாளர் தேவை

யாழ் வடமராட்சியில் ஓய்வு நிலை ஆசிரியை ஒருவருக்கு தங்கியிருந்து சிறு வீட்டு வேலைகளை செய்யக்கூடிய பெண் உதவியாளர் (தனியாள்) தேவை

ஆதரவு இல்லாதவர்கள் நிரந்தரமாக இருக்கக்கூடிய வசதியும் உண்டு

உணவு, உடை, தங்குமிடம் உட்பட சம்பளம் ரூபா 20,000 வழங்கப்படும்

(C-1470)

077 988 7538


# வீதி விபத்தில் ஆசிரியை பலி

(கொழும்பு)

வத்தளை - ஏகித்த சந்தியில் பாதையை கடக்க முற்பட்ட ஆசிரியை ஒருவர் பாரவூர்தி மோதியதில் உயிரிழந்துள்ளார்.

வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏகித்த சந்தியில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 9.50 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வத்தளை பட பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய சசிகலா ஜெகதீஸ்வரன் என்ற இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-03)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## செல்லப்பா சதானந்தன்

(J.P, ஓய்வுநிலை அதிபர், சமூகசேவகர்)

திதி : மாசி மாத பூர்வபட்ச சப்தமி

தோற்றம் 1940.07.23

மறைவு 2019.03.13

மாறிடும் வாழ்வினில் மாறாது
உங்கள் நினைவுகள்
ஆண்டுகள் இரண்டல்ல
ஆயிரமானாலும்
அழியாது அப்பா...

"ஆனந்தபவன்"
அல்வாய்.

(C-1460)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 – 05 – 1933



மறைவு 18 – 02 – 2021

## கனகசபை பரராஜசிங்கம்

புத்தூர் கிழக்கு, காளியானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பரராஜசிங்கம் நேற்று (18.02.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நல்லையா, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் றோசாதேவி, ரஞ்சினிதேவி (சுவிஸ்), உதயகுமாரி, இராசகுமாரி, சிவகுமாரி (பிரான்ஸ்), மதிரூபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீகாந்தன், தவராசா (சுவிஸ்), துரைலிங்கம், தவராசசிங்கம், சிவரூபன் (பிரான்ஸ்), சாந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கீதா, கௌதமன் (கனடா), நர்த்தனா, அனோஜா (சுவிஸ்), அஜிந்தன் (சுவிஸ்), அஞ்சனா (சுவிஸ்), தர்சிகா, அர்ச்சிகா, அற்புதா, லக்சனா (பிரான்ஸ்), தனுஜா (பிரான்ஸ்), தேனுஜன் (கனடா) மித்திலா (கனடா), இனியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.02.2021) வெள்ளிக்கிழமை புத்தூர் காளியானையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-1473)

புத்தூர் கிழக்கு,
காளியானை.

077 400 5930
077 075 7195

தகவல்:-
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 31.01.2020 அன்று இறைபதம் அடைந்த எமது சகோதரன்

அமரர்

## இராசையா இரத்தினசிங்கம்

[சிவஞானம்]



ஆண்டுகள் ஒடி மறைந்ததையா – உன்
அழகிய முகம் மறைந்திடுமா?
வாழ்வினை எமக்குப் புரிய வைத்தாய்
எம்மை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டாய்

அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 07.01.1948

மறைவு 31.01.2020

கோவில் வீதி,
மல்லாகம்.

(5831)

குடும்பத்தினர்

# பாரதிய ஜனதாவின் தேசியக் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகலாம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அச்சம்

(கொழும்பு)

**இந்திய பாரதிய ஜனதா கட்சியினால் நேரடியாக இலங்கையில் அரசியல் கட்சி யாக உருவாக முடியாது. ஆனால் அவர்களின் பிரதிநிதிகளாக இலங்கையில் ஒரு கட்சி உருவாகி அவர்களின் கொள்கைகளை இலங்கையில் நடைமுறைப்ப டுத்த எந்த தடைகளும் இல்லை. அநேகமாக பாரதிய ஜனதா கட்சியின் இலங்கை பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உருவாகலாம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**



விடுதலைப்புலிகளின் அர சியல் அஸ்திரமாக இன்னமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகின்றது என்பதில் மாற்றுக்கருத்தில்லை எனவும் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய பாரதிய ஜனதா கட்சி இலங்கையிலும் ஆதிக் கம் செய்யும் என அமை ச்சர் அமித்ஷா கூறியதாக வெளிவ ரும் செய்திகளில் உத் தியோக பூர்வ அறிவிப்புகள் என எது வும் இல்லை. நிகழ் வொன் றில் அவர் உணவு உட்கொ ண்ட வேளையில் அருகில் இருந்தவர்களுக்கு கூறியதாக தெரிவிக்கப்படுகின்றது. அதற் காக நாம் அரசாங்கத் தின் நிலைப்பாட்டை தெரிவி க்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் எனது தனிப்பட்ட நிலைப்பாட்டை என்னால் கூற முடியும். பாரதிய ஜனதா கட்சியினால் நேரடியாக இல ங்கையில் அரசியல் செய்ய முடியாது. அதற்கான அரசியல் அமைப்பு ரீதியிலான அனு மதியும் இல்லை. தேர்தல்கள் திணைக்களமும் அதற்கு அனுமதிக்க வாய்ப்புகள் இல்லை. எனவே இது ஒரு கதையாக வேண்டுமானால் கூறலாம்.

ஆனால் அவர்களினால் மறைமுக அரசியலில் ஈடுபட முடியும். இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளில் ஏதேனும் ஒரு கட்சியினூடாக இலங்கை யில் அவர்களின் கொள்கை யைப் பரப்பி அவர்களின் இல ங்கை பிரதிநிதிகளாக இங்கு ஒரு கட்சி இயங்க முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு போன்றொரு கட்சியை அவர்களின் பிரதிநிதிகளாக வைத்துக் கொள்ள முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பை பொறுத்தவரை அவர் கள் இன்று வரை இந்தியா மற்றும் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளாக இலங்கையில் செயற்பட்டு வருகின்றனர்.

அவர்களுக்கான முழு நிதி யும் மேற்கு நாடுகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் மூலமாகவும், புலிகளை ஆத ரிக்கும் அமைப்புகள் மூலமாக வும் கிடைத்து வருகின் றது.

தேசிய கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக வாய்ப்புகள் உள்ளது.

ஆனால் கட்சியை உரு வாக்கினாலும் வாக்களிக்க வேண்டிய கடமை மக்களிடம் உள்ளது. "மக்கள் ஆதரிக்க வேண்டுமே" என சரத் வீர சேகர தெரிவித்தார். (நி-4)

## முச்சக்கரவண்டிக்கு தீ மூட்டிவிட்டு தப்பித்த மர்ம நபர்கள்



(நல்லூர்)

நவாலி அரசடியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கும் பல் முச்சக்கர வண்டிக்கு தீமூ ட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

அந்தக் கும்பலை துரத்திச் சென்ற இளைஞர்கள் மோட் டார் சைக்கிள் ஒன்றை மீட்டு மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இச் சம்பவம் பற்றி தெரியவருவதா வது, இரண்டு மோட்டார் சைக் கிளில் வந்த 5 பேர் கொண்ட கும்பலே இந்த அடாவடியில் ஈடுபட்டுள்ளது. யாழ்ப்பாணத் தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களை வெளிநாட்டி லிருந்து நடத்துபவர் என சந் தேகிக்கப்படுபவரின் வீட்டுக் குள் புகுந்தே முச்சக்கர வண் டிக்கு தீவைக்கப்பட்டது.

சம்பவத்தையடுத்து கும்பல் தப்பிச்சென்ற நிலையில் அந் தப் பகுதி இளைஞர்கள் துரத் திச் சென்றுள்ளனர். அதனால் மோட்டார் சைக்கிளை வீதி யில் கைவிட்டு கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

அந்த மோட்டார் சைக்கிள் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்ப வம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)

## பளைப் பகுதியில் பெரும்பான்மையினருக்கு காணிகளை வழங்க அரசு முனைகிறது

### உடன் தடுத்து நிறுத்தக் கோருகிறார் சுரேஷ்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி - பளை பகுதி யில் பல ஏக்கர் காணிகளை சீன நிறுவனம் ஒன்றிற்கும், சிங்கள வர்த்தகர்களிற்கும் வழங்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரி வித்தார்.

நேற்று யாழ். ஊடக அமை யத்தில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

குறித்த விடயத்தை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கண்டுகொள்ளாமலிருப்பது வருத்தமளிப்பதாகவும் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

பளை பகுதியில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமாக 3 ஆயிரம் ஏக்கர் காணியுள்ளது. அந்தப் பகுதி யில் சீன நிறுவனத்திற்கும், சிங் கள முதலாளிகளிற்கும் அரசு காணி வழங்கவுள்ளதாக நம் பத்தகுந்த செய்தி எமக்கு கிடைத்துள்ளது.

தமிழ் மக்களின் காணி களை பறிமுதல் செய்து சீனக் காரர்களுக்கும் பெரும்பான்



மையினருக்கும் கொடுக்க முன்னாயத்த நடவடிக்கை யில் அரசு ஈடுபட்டுள்ளது.

பளையில், புதுக்காட்டு சந் திக்கு அண்மையில் தேசிய காணி அபிவிருத்தி சபைக்கு சொந்தமான 287 ஏக்கர் தென்னந்தோட்டங்கள் உள் ளன. அதை சிங்கள முதலா ளிகளிற்கு கொடுக்க நடவடிக் கையெடுக்கப்பட்டுள்ளது. அந்தக் காணிகளை யாழ்ப் பாணத்திலுள்ள வர்த்தகர்கள் கேட்டும், அவர்களிற்கு வழங் காமல் சிங்கள முதலாளிக ளிற்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசியல் பிரச்சினை யில்லை, அபிவிருத்தி நடந் தால் போதும் என அரசாங் கம் கூறிக்கொண்டிருக்கிறது. அபிவிருத்தியென்ற பெயரில் தமிழர்களின் காணிகளை பிடுங்கி சிங்களவர்களிற்கு கொடுக்கும் நடவடிக்கையை த்தான் இந்த அரசாங்கம் மேற் கொள்கிறது.

அரசாங்கம், இராணுவம் அனைவரும் கூட்டாக இத னைச் செய்கிறார்கள்.

தமிழ் பாராளுமன்ற உறுப் பினர்கள் இதை கண்டு கொள் ளாமலிருப்பது வருத்தமானது. காணி சீர்திருத்த ஆணை க்குழுவின் பிராந்திய அலு வலகத்தை யாழ்ப்பாணத்திலி ருந்து அநுராதபுரத்திற்கு மாற்ற முயல்வதும் இதற்குத் தான். இந்த மாற்றத்தை தடு த்து நிறுத்த வேண்டும். வட க்கிற்கான பிராந்திய அலு வலகம் வடமத்திய மாகாண த்திற்கு மாற்றுவதை ஏற்க முடியாது.

பளையில் சீனா அல்லது வேறு நிறுவனங்களிற்கு காணி கொடுப்பதை நிறுத்த வேண்டும். இந்த பகுதிகளை சேர்ந்த ஏராளமான இளை ஞர்கள் காணி கேட்டு விண் ணப்பித்துள்ளனர். அவர்க ளிற்கு காணி வழங்காமல் சீனா, சிங்களவர்களிற்கு வழ ங்குவதை தடுத்து நிறுத்த வேண்டும். இனிவரும் நாட்க ளில் பெரும் போராட்டங் களிற்கு தமிழ்மக்கள் தங் களை தயார்படுத்திக் கொள்ள வேண்டிய சூழலுக்கு அரசு தள்ளுகின்றது எனத் தெரி வித்துள்ளார். (நி-6-33)



புலம்பெயர்ந்து தற் போது ஜேர்மனியில வசிக்கும் விக்கினேஸ் வரா மகாவித்தியால யத்தின் பழைய மாணவன் திருமேனி பஞ்சாட்சர தேவன் மேற்படி பாடசாலை யில் மாணவர் தொகை வீழ்ச்சியடை ந்து செல்வதைக் கரு த்திற் கொண்டு தரம்-01 இல் புதிதாக இணைந்து கொள்ளும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் ரூபாவை வைப் பிலிட்டார். அந்தவகையில் இந்த வருடம் தரம்-01 இல் இணை ந்துகொண்ட 15 மாணவர்களுக்கும் தலா பத்தாயிரம் ரூபா வைப்பிலிடப் பட்டது. அத்துடன் 15 மாணவர்களுக்கும் மக்கள் வங்கி சுன்னாகம் கிளையினரால் சுமார் 2000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங் களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம்: ரவிசாந்)

# கிறிஸ் மோரிஸுக்கு அடித்தது ஜாக்பொட் ஐ.பி.எல் ஏலத்தில் கொண்டாட்டம்



கிறிஸ் மோரிஸ்

**ஐ.பி.எல்., வீரர்கள் ஏலத்தில் அதிகபட்சமாக கிறிஸ் மோரிஸை ரூ. 16.25 கோடிக்கு ராஜஸ்தான் அணி வாங்கியது.**

**ஐ.பி.எல்., தொடரின் 14வது சீசன் இந்தியாவில் நடக்க உள்ளது. இதில் பங்கேற்கும் வீரர்களுக்கான 'மினி' ஏலம் நேற்று சென்னையில் நடந்தது. 61 காலியிடத்துக்கு 292 வீரர்கள் ஏலத்தில் பங்கேற்றனர். 164 இந்திய வீரர்கள், 125 வெளிநாட்டு வீரர்களுடன், 3 ஐ.சி.சி., உறுப்பு அணிகளின் வீரர்கள் இடம் பெற்றனர்**

### மோரிஷுற்கு 'ஜாக்பாட்'

கருண் நாயர், அலெக்ஸ் ஹேல்ஸ், ஜேசன் ரோய் என முதல் மூன்று வீரர்களை யாரும் வாங்கவில்லை. அடுத்து வந்த ஸ்ரீவ் ஸ்மித்தை ரூ.2.20 கோடிக்கு டில்லி அணி வாங்கியது. தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரர் கிறிஸ் மோரிஷுக்கும் (அடிப்படை விலை ரூ. 75 லட்சம்) 'டிமாண்ட்' அதிகமாக இருந்தது. மும்பை, பெங்களூரு, ராஜஸ்தான், பஞ்சாப் அணிகள் மாறி மாறி கேட்டன. கடைசியில் ரூ. 16.25 கோடிக்கு ராஜஸ்தான் அணி வாங்கியது. 70 ஐ.பி.எல்., போட்டியில் 551 ஓட்டங் கள் எடுத்து, 80 விக்கெட் டுக் கள் மட்டும் வீழ்த் திய இவ ருக்கு இவ்வளவு பணம் கொடுத்தது ஆச்சரியமாக இருந்தது.

### 'காஸ்ட்லி' வீரர்

ஐ.பி.எல்., வீரர்கள் ஏல வரலாற்றில் மிக அதிக தொகைக்கு வாங்கப்பட்ட 'காஸ்ட்லி' வீரர் ஆனார் தென்னாபிரிக்காவின் கிறிஸ் மோரிஸ்.

நேற்று இவரை ரூ. 16.25 கோடிக்கு ராஜஸ் தான் அணி வாங்கியது. இதற்கு முன் 2015இல் டில்லி அணி ரூ. 16 கோடிக்கு யுவராஜ் சிங்கை வாங்கியிருந்தது.

தவிர 2020ல் கம்மின்ஸ் (ரூ. 15.50 கோடி, கொல்கத்தா), 2017இல் ஸ்ரோக்ஸ் (ரூ. 14.50 கோடி, புனே), 2014ல் யுவராஜ் சிங் (ரூ. 14 கோடி, பெங்களூரு) அதிக தொகைக்கு ஏலம் போயினர்.

● இருப்பினும் ஐ.பி.எல்., அரங்கில் அதிக சம்பளம் பெறும் வீரராக திகழ்கிறார் பெங்களூரு அணி கேப்டன் ஹோலி. இவருக்கு ரூ. 17 கோடி கொடுத்து தக்கவைக்கப்பட்டார்.

### 'லக்கி' மக்ஸ்வெல்



'ஆஸியின் சகலதுறை வீரர் மக்ஸ் வெல்லை வாங்க (அடிப் படை விலை ரூ. 2 கோடி) மீண்டும் கடும் போட்டி ஏற்பட்டது. கடந்த சீசனில் 13 போட்டியில் ஒரு சிக்ஸர் கூட அடிக்காத இவரை வாங்க, கொல்கத்தா, சென்னை, பெங்களூரு அணிகள் அடித்துக் கொண்டன. தொகை அதிகரிக்க, சென்னை அணி விலகிக் கொண்டது. கடைசியில் 12 மடங்கிற்கும் அதிகமாக ரூ. 14.25 கோடி கொடுத்து பெங்களூரு அணி மக்ஸ்வெல்லை வாங்கியது.




ஏலத்தின்போது சென்னை சுப்பர் கிங்ஸின் முக்கியஸ்தர்கள்...

### சென்னை அணியில் மொயின்



ஐ.பி.எல்., ஏலத்தில் மொயீன் அலியை ரூ. 7 கோடிக்கு சென்னை அணி வாங்கியது.

சென்னை அணிக்கு 7 வீரர்கள் தேவை என்ற நிலையில் நேற்று 4 வீரர்கள் ஏலத்தில் வாங்கப்பட்டனர். ஆரம்பத்தில் மக்ஸ்வெல்லை வாங்க போட்டியிட்டது. பின் சுழற்பந்து வீச்சு 'சகலதுறை வீரர்கள்' மொயீன் அலி, கிருஷ்ணப்பா கௌதம் என இருவரை வாங்கியது.

மொயின் அலி

இதில், இங்கிலாந்தின் மொயின் அலி 33, ரூ. 7 கோடிக்கு வாங்கப்பட்டார். சமீபத்திய சென்னை டெஸ்டில் இரு இன்னிங்ஸிலும் சேர்த்து 8 விக்கெட் சாய்த்த இவர், துடுப்பாட்டத்தில் 18 பந்துகளில் 43 ஓட்டங்கள் எடுத்தார்.

### நிச்சயமாக இல்லை

கடந்த ஆண்டு யு.ஏ.இ.,யில் நடந்த ஐ.பி.எல்., தொடருக்குப் பின் தோனி ஓய்வு பெற்று விடுவார் என கூறப்பட்டது. இது குறித்து அவரிடம் கேட்ட போது, 'டெப்னெட்லி நொட்' (நிச்சயமாக இல்லை) என தெரிவித்தார்.

நேற்று சென்னை அணிக்காக ஏலத்தில் பங் கேற்க வந்த முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் பாலாஜி, தலைமை செயல் அதிகாரி காசி விஸ்வநாதன் உள்ளிட்டோர் தங்கள் மஞ்சள் நிற 'ஜேர்சியில்' தோனி சொன்ன 'டெப்னெட்லி நொட்' என்ற வாசகத்தை அச்சிட்டு இருந்தனர்.

# யாருக்கு எவ்வளவு?

**ஐ.பி.எல்., ஏலத்தில் கோடிகளில் ஏலம் போன 25 வீரர்கள் விபரம்:**

| வீரர் | அணி | தொகை |
|---|---|---|
| கிறிஸ் மோரிஸ் | ராஜஸ்தான் | ரூ. 16.25 கோடி |
| கைல் ஜேமிசன் | பெங்களூரு | ரூ. 15 கோடி |
| மக்ஸ்வெல் | பெங்களூரு | ரூ. 14.25 கோடி |
| ரிச்சர்ட்சன் | பஞ்சாப் | ரூ. 14 கோடி |
| கௌதம் | சென்னை | ரூ. 9.25 கோடி |
| ரிலே மெரேத் | பஞ்சாப் | ரூ. 8 கோடி |
| மொயின் அலி | சென்னை | ரூ. 7 கோடி |
| ஷாருக் கான் | பஞ்சாப் | ரூ. 5.25 கோடி |
| ரொம் கர்ரான் | டில்லி | ரூ. 5.25 கோடி |
| கூல்டர் நைல் | மும்பை | ரூ. 5 கோடி |
| கிறிஸ்ரியன் | பெங்களூரு | ரூ. 4.8 கோடி |
| ஷிவம் துபே | ராஜஸ்தான் | ரூ. 4.4 கோடி |
| ஹென்ரிக்ஸ் | பஞ்சாப் | ரூ. 4.2 கோடி |
| அடம் மில்ன் | மும்பை | ரூ. 3.2 கோடி |
| சகிப் அல் ஹசன் | கொல்கத்தா | ரூ. 3.2 கோடி |
| பியுஸ் சாவ்லா | மும்பை | ரூ. 2.4 கோடி |
| ஸ்மித் | டில்லி | ரூ. 2.2 கோடி |
| ஹர்பஜன் சிங் | கொல்கத்தா | ரூ. 2 கோடி |
| கேதர் ஜாதவ் | ஐதராபாத் | ரூ. 2 கோடி |
| சாம் பில்லிங்ஸ் | டில்லி | ரூ. 2 கோடி |
| முஜீப் ரஹ்மான் | ஐதராபாத் | ரூ. 1.5 கோடி |
| சகாரியா | ராஜஸ்தான் | ரூ. 1.2 கோடி |
| டேவிட் மலான் | பஞ்சாப் | ரூ. 1 கோடி |
| உமேஷ் யாதவ் | டில்லி | ரூ. 1 கோடி |
| முஸ்தபிஷுர் | ராஜஸ்தான் | ரூ. 1 கோடி |

*இந்திய ரூபாய்களில்*

# மாஸ்டர் கிரேட்; வலிமை அப்டேட் அஷ்வின் ருசிகரம்



சென்னை டெஸ்டில் ரசிகர்கள் செயலை பாராட்டியுள்ளார் அஷ்வின்.

இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதிய முதல் இரு டெஸ்ட் போட்டிகள் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடந்தது.

இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது, அஜித் ரசிகர்களின் செயல் பலரையும் வியக்க வைத்தது. முன்னணி வீரர்களிடம், விரைவில் 'ரிலீஸ்' ஆக உள்ள அஜித்தின் வலிமை படத்தின் 'அப்டேட்' பற்றி கேட்டனர்.

இதுகுறித்து ஆட்டநாயகன் விருது வென்ற தமிழக வீரர் அஷ்வின் கூறுகையில்,

"பவுண்டரி லைனில் நின்று கொண்டிருந்தேன். அப்போது திடீரென ஒருவர், 'அஷ்வின்... அஷ்வின்,' என அழைத்தார். என்னப்பா எனக் கேட்டேன்.

அதற்கு, வலிமை அப்டேட் எப்படி என கேட்டார். எனக்கு ஒன்னுமே புரியலை, அப்புறமாக கூகுள்ள, என்னடா இதுன்னு, சேர்ச் (தேடல்) செய்து பார்த்தேன், என்னால சிரிப்ப தாங்க முடியலை. வலிமை அப்டேட்டுனு, திடீர்னு மேட்ச்ல கேட்டா, எப்படிங்க கனெக்ட் பண்றது.

மறுநாள் என்னை நோக்கி வந்த இங்கிலாந்து வீரர் மொயீன் அலி, 'வலிமை என்றால் என்ன,' என கேட்டார். பிறகு தான் தெரிந்தது, மொயீன் அலியிடமும் வலிமை அப்டேட் குறித்து கேட்ட விடயம். அப்பா... கலக்கிட்டீங்க. மாஸ்டர் படம் எல்லாம் கிரேட், ஆனா வலிமை படத்தின் அப்டேட் குறித்து இங்கிலாந்து வீரரிடம் கேட்டதெல்லாம் வேற லெவல்,"என்றார்.

## நீங்காத நினைவுகளுடன் நான்காவது ஆண்டினில்...

சிவனருளால்
31 - 03 - 1934



சிவன்தாளில்
19 - 02 - 2017

'மனிதநேய மாமனிதர்'

### அமரர் விசுவநாதர் கயிலாசபிள்ளை

முன்னாள் தலைவர். அகில இலங்கை இந்து மாமன்றம்
ஸ்தாபகர் - தலைவர் - மனிதநேய நம்பிக்கை நிதியம்
முன்னாள் தலைவர் - திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

தோன்றிய மண்ணது சீர்பொலி அராலிப்பதி
ஊன்றிய கருத்தோ மக்கள் சேவை என - நன்றே
ஒன்றிய எண்ணங்கள் இனிதே செயலாக்கினீர் - நீவிர்
இன்றியே கடிதென ஓடின ஆண்டுகள் நான்கு..

நீங்காத நினைவுகளுடன்...

அகில இலங்கை இந்து மாமன்றம்
மனிதநேய நம்பிக்கை நிதியம்
திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

(c-1213)

## 31ம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்
1954 - 10 - 16



விண்ணில்
2021 - 01 - 21

### அமரர். சிவபாலராசா விஜயலட்சுமி

அவர்கள் அம்பலவன் பொக்கணை, முல்லைத்தீவை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அமரர். சிவபாலராசா விஜயலட்சுமி 21.01.2021 அன்று இறைவனடி எய்தினார். 20.02.2021 நாளை சனிக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்தி பிரார்த்தனையில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்து தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

முள்ளிவாய்க்கால்,
முல்லைத்தீவு.

குடும்பத்தினர்.

(C-1454)

## நான்காவது ஆண்டு நினைவுகளில் அமரர். விசுவநாதர் கயிலாசபிள்ளை



65 வருட அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சமயப்பணியில் ஒப்பற்ற தலைமைத்துவத்தை வழங்கிய இரு பெரும் ஆளுமைகள் நம்மிடையே இன்று இல்லை. ஆண்டுகள் பல கடந்தாலும் மாமன்றத்தின் வளர்ச்சியிலும் தூரநோக்குச் சிந்தனையுடனான திட்டமிடலிலும் அமரர்களான வி.கயிலாசபிள்ளை மற்றும் கந்தையா நீலகண்டன் ஆகியோர் ஆற்றிய பணிகள் என்றும் நினைவுகளை விட்டு நீங்காதவை.

19-02-2017 அன்று கயிலாசபிள்ளை இறைவனடி சேர அன்றிலிருந்து சரியாக ஒரு வருடத்தில் 18-02-2018 அன்று கந்தையா நீலகண்டன் இறைவனடி சேர்ந்தார். அடுத்தடுத்து இரு ஆளுமைகளை மாமன்றம் இழந்தது.

கயிலாசபிள்ளை 1934 ஆம் ஆண்டு பிறந்து. 83 ஆண்டுகள் இத்தரணியிலே வாழ்ந்து தனது வாழ்நாளில் கூடிய காலத்தை சமய மற்றும் சமூக சேவைகளுக்கு அர்ப்பணித்து வாழ்ந்தவர். எவரிடத்திலும் மிகவும் அன்பாகவும் சாந்தமாகவும் உரையாடும் தன்மை கொண்டவர்.

யாரையும் கடிந்து பேசியதில்லை. இந்துமாமன்றத்தின் தலைமைப் பதவியை வகுத்த நீண்டகாலத்தில் எவற்றையும் சீராகவும் நிதானமாகவும் கொண்டு செயற்பட்டதுடன் தன்னை எதிர்ப்பவரிடத்திலும் சாந்தமாக உரையாடி அவர்களை வென்றதையே நாம் கண்டோம்.

அராலி எனும் பூர்வீகக் கிராமத்தில் பிறந்து. இந்துக் கல்வி விருத்தியின் விருட்சமாகப் புகழ்பூத்த கல்வி ஆலயமான யாழ்.இந்துக் கல்லூரியில் கற்றுப் பின் பட்டதாரியாகி இந்த நாட்டின் "கணிதப்புலி" எனப் போற்றப்பட்ட ஒரு நிதி நிர்வாக விற்பன்னராக. பட்டயக்கணக்காளராக உயர்ந்து. இந்த நாட்டின் ஒரு பெரிய வர்த்தக குழுமத்தின் பொறுப்பையும் ஏற்று நடத்திய பெருமகன்தான் அமரர்.கயிலாசபிள்ளை.

அந்த வர்த்தகக் குழுமத்தின் உயர் தலைமைப்பதவி நாடிவந்த போது தனது சைவப்பரம்பரைச் சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பதே முதன்மையானது என்ற காரணத்தினால் அதனை உதாசீனத்துடன் தவிர்த்துக் கொண்டார். எனினும் இந்நாட்டின் வர்த்தக உலகம் அவரைக் கணித மேதையாக. வர்த்தக நிபுணராகப் போற்றி மரியாதை தந்து நின்றது.

இந்த நாட்டின் பட்டயக்கணக்காளர் சங்கத்தில் பல முக்கிய பதவிகளை வகித்த கயிலாசபிள்ளையை "பெருமைமிக்கவர் இல்லம்" (House of Fame) இல் சேர்த்து அச்சங்கம் பெருமை தேடியமையும் இந்த நாட்டின் பங்குப்பரிவர்த்தனை மையத் தலைவராகவும் அவரை அரசாங்கம் நியமித்து கௌரவித்ததும் ஒரு காலத்தில் இந்நாட்டின் பிரதமராக இருந்தவர் அமரர்.கயிலாசபிள்ளையைத் தன் பொருளாதார ஆலோசகராகப் பயன்படுத்தியமையும் வரலாறு.

அது மட்டுமல்லாமல். எமது சமூகம் மதிக்கும் ஒரு பெரியவராக வாழ்ந்த எங்களின் இறைசிரோரத்தினம் கயிலாசபிள்ளை ஐயா 2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தமிழ்த் தேசியக் கூட்டணியை இணைத்து வைத்த அனுசரணையாளர் குழுவில் முதன்மையானவர்.

சிவில் சேவையில் இருந்தவரும் இந்தியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகராகவும் திகழ்ந்த சி.சி.குமாரசுவாமி. பிரபல சிவில் சேவையாளராகவிருந்து செனட்டராகி மத்திய அமைச்சர் சபையில் பொறுப்பான அமைச்சராக இருந்த சேர்.கந்தையா வைத்தியநாதன். உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்த நீதியரசர் பொன்.ஸ்ரீஸ்கந்தராஜா. இலங்கைச் சட்டவழக்கறிஞர் சங்கத் தலைவராக இருந்த எஸ்.சோமசுந்தரம். பொதுச் செயலாளராகப் பணியாற்றித் தலைவரான ஆ.சின்னத்தம்பி ஆகியோர் இருந்த மாமன்றத் தலைமை ஆசனத்தில். 1986 இல் அமர்ந்த வே.பாலசுப்பிரமணியம். தேடி அழைத்த பிரதித் தலைவர் கயிலாசபிள்ளை ஆவார்.

தலைமையக கட்டடத்தைத் தானும் கயிலாசபிள்ளையும் சேர்ந்து கட்டுவோம் எனக் உறுதிபூண்ட பாலசுப்பிரமணியம் 15-07-1992 இல் இறையடி சேர்ந்துவிட. 02-08-1992 இல் மாமன்றத் தலைமைப் பொறுப்பை ஏற்ற கயிலாசபிள்ளை மாமன்றத்தின் வளர்ச்சிப் பாதைக்கு மேலும் புத்துயிர் தந்தார்.

இதற்கும் மேலாக 'மனிதநேய நிதியம்' என்ற ஒரு நிதியத்தினை அமைத்து இலங்கையில் மட்டுமல்லாமல் இங்கிலாந்து. கனடா. அமெரிக்கா. அவுஸ்திரேலியா எனப் பல நாடுகளிலும் அந்த நிதியத்தின் கிளைகளை அமைத்து. அவற்றின் மூலம் கிடைத்த நிதிகளைக் கொண்டு நமது நாட்டில் பல சிறுவர் இல்லங்களுக்கும் வயோதிபர் பரிபாலன நிலையங்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தாராளமாக உதவிகள் வழங்க வழிவகுத்தவர்.

ஸ்ரீ கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சர நாதனின் பக்தனாகப் பல ஆண்டுகள் அப்புனிதத் திருத்தலத்தின் மேன்மைக்குச் சேவை செய்வதிலும் தன்னை அர்ப்பணித்திருந்தார்.

அமரர். கயிலாசபிள்ளையின் முயற்சியால் 320 ரூபாய் மில்லியனுக்கு மேல் செலவிட்டு இந்திய அரசாங்கம் அத்திருத்தலத்தில் மகாமண்டபத்தைக் கருங்கல்லினால் கட்டித்தர முன்வந்தது. அது மட்டுமல்லாமல். கோயிலின் நான்கு புறங்களும் கோபுரங்கள் கட்டப்பட வேண்டும் அதற்குரிய உதவிகளை இந்திய அரசு செய்ய வேண்டும் என அன்றைய இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் காந்தாவிடம் நேரில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். "இப்போது நடக்கும் வேலைகள் முடியட்டும். அடுத்து அதனைக் கவனிப்போம்" என அசோக் காந்தா கூறியிருந்தார்.

தன்னால் இயங்கக்கூடிய வரை. தன்னாலான பணிகளை திருக்கேதீச்சர தலத்திற்கு ஆற்ற வேண்டும் என்பதே கயிலாசபிள்ளை திருக்கேதீச்சரப் பெருமானிடம் விடுத்து வந்த வேண்டுகோளாக இருந்தது. இன்று அவர் தொடக்கிய திருப்பணி வழியில் இன்று அழகிய மகாமண்டபம் நிறைவேற்றப்பட்டு சுற்றுப்பிரகார சந்நிதிகளும் கருங்கற்களால் அமைக்கப்பட்டு வரலாற்றுத் தொன்மை மிகுந்த திருக்கேதீச்சரத் திருத்தலம் மஹா கும்பாபிஷேகத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றது.

கொழும்பு மாநகரில் இன வேறுபாடுகளுக்கு அப்பால் சகலரும் மதிக்கும் பெரும் மனிதராக உயர்ந்தாலும் தான் பிறந்த யாழ்.மண்ணை என்றும் மறக்காதவர் இப்பெருமகன். தானும் மனைவியும் பிறந்து வளர்ந்த "வடக்கு வீடு" அமைந்த அராலிக் கிராமத்தில் கூடப் பல அறப்பணிகளை செய்துள்ளார். குறிப்பாக அராலி சிந்தாமணிப் பிள்ளையார் கோயில். அராலி சரஸ்வதி வித்தியாலயம் ஆகியவற்றுக்கும் நிறைந்த திருப்பணிகளை ஆற்றியவர்.

நாடளாவிய ரீதியில் இரத்மலானை சக்தி இல்லம். மன்னார் சித்தி விநாயகர் ஆலயம் என அவர் வாரி வழங்கி வளர்த்த நிலையங்கள் பல. கீரிமலையில் சிவபூமி மடத்தில் அவரின் 80 ஆவது பிறந்த தினத்தில் மடத்தின் மேல் மாடியில் "கயிலாசபிள்ளை கோட்டத்தை". அவரது வாழ்நாளில். அவர் காட்டிய வழியில். அவரின் பிள்ளைகள் அமைத்து கௌரவித்த பெருமை எமது ஆன்மிக வரலாற்றில் மறக்க முடியாத அத்தியாயம்.

அகில இலங்கை இந்துமாமன்றம் மற்றும் மனிதநேய நிதியம் ஊடாக அவர் செய்த பணிகளின் அடிநாதமாக இருந்த புண்ணிய கைங்கரியத்தைச் சகலரும் உணர வேண்டும். தானும் நிறைய வாரி வழங்கி மற்றவர்களையும் அணுகி உதவிகள் சேர்த்து அவற்றை மனிதாபிமானப் பணிகளுக்கு திசை திருப்பி விட்டார்.

பிறருக்கு உதவி செய்யாது பிறநாடுகளில் வாழும் பலரின் பண உதவிகளை இந்நாட்டில் வாடி வதங்கும் எங்களின் உடன் பிறப்புக்களுக்குப் பெற்றுக் கொடுத்தார்.

அமரர்.கயிலாசபிள்ளை ஆற்றிய பணிகளை தொடர்ந்தும் மறவாது நினைவுகூர்ந்து அவற்றையெல்லாம் போற்றுவோம். போற்றுவதுடன் நின்றுவிடமாட்டோம். அந்தப் புனித உள்ளத்திற்கு மனநிறைவுதர எம்மாலான நல்ல பணிகளை மேலும் எடுத்துச் செல்வோம்.

**வே.கந்தசாமி**
**பொதுச் செயலாளர்**
**அகில இலங்கை இந்து மாமன்றம்.**

# மக்களுக்கு செய்கின்ற சேவைகள் மக்களை சென்றடைய வேண்டும்

## கிளைத்தலைவர்களுடனான சந்திப்பில் முதல்வர்

(யாழ்ப்பாணம்)

**மக்களுக்கு செய்கின்ற சேவைகள் உரிய முறையில் அவர்களை சென்றடைய வேண்டும். வீண் சிரமங்களையும் அலட்சியங்களையும் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க கூடாது என யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாநகர சபை கிளைத் தலைவர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், தரப்பட்ட ஒரு வேலையினை திறம்பட செய்து முடிக்க கூடிய ஆளுமைமிக்க பணிப்பாளராக அனைவரும் இருக்க வேண்டும்.

மாநகரத்தில் ஏதாவது ஒரு செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கு நான் முயன்றால் அதனை தாபன விதிகளுக்கு ஏற்றவகையில் எவ்வாறு செய்யலாம் என்று கூறுகின்ற அரச அதிகாரிகளாக நீங்கள் இருக்க வேண்டும்.

ஏதாவது பிரச்சினைகள் வந்தால் உங்களுக்காக நான் ஒரு சட்டத்தரணியாக உங்களைப் பாதுகாப்பேன்.

சபைக்கு வருமானம் தரும் வழிமூலங்களை தடுக்காதீர்கள். ஆனால் செலவுகளை கட்டுப்படுத்துங்கள். நீங்கள் செய்கின்ற சேவைகள் மக்களை சென்றடைதல் வேண்டும்.

மாநகரத்திற்கு வரும் மக்களுக்கு வீண்சிரமங்களையும் அலைச்சல்களையும் ஏற்படுத்தாதீர்கள். சோலை வரியாக இருக்கட்டும், தண்ணீர் இணைப்பாக இருக்கட்டும். அல்லது கட்டடம் கட்டுவதற்கான அனுமதியாக



இருக்கட்டும் அதற்குரிய விண்ணப்பப்படிவங்களைப் பெற வரும் மக்களுக்கு அவ் விண்ணப்பப்படிவங்களுடன் தேவையான ஆவணங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான ஒரு துண்டுப்பிரசுரத்தையும் வழங்குங்கள் என மேலும் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் மாநகர சபை ஆணையாளர் மற்றும்மாநகரசபை செயலாளர் ஆகியோர் கிளைத்தலைவர்களுக்கு பல்வேறுபட்ட ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்கினார்கள். (4-6-33)

## தாச்சி சுற்றுப்போட்டி நாளை இறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 2020 ஆம் ஆண்டு தாச்சி சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைதடி குமரநகர் விளையாட்டுக்கழக மைதா னத்தில் நடைபெறவுள்ளது என தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் செயலாளர் வை.ஆனந்தஜெஸ்கரன் அறிவித்துள்ளார். இப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் எதிர் சண்டிலிப்பாய்உதய சூரியன்விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (4-6)




# 'பின்லா' திட்டத்தை ஊக்குவிக்க மக்களுக்குரிய கொடுப்பனவை வழங்கவும்

## நகரசபை உறுப்பினர் வலியுறுத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் காணப்படுகின்ற உக்காத கழிவுகளை பணம் கொடுத்து பெறும் வள நிலையத்தின் செயற்பாடுகளை துரிதப்படுத்தி உக்காத கழிவுகளை பொதுமக்கள் வள நிலையத்தில் ஒப்படைக்க ஊக்குவிக்க வேண்டும் எனச் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.தர்சன் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் நகரசபை யில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த ஆறு மாத காலத்திற்கு முன்னர் சாவகச்சேரி நகரசபையை இணைத்து பின்லா திட்டம் ஊடாக கழிவு வள நிலையம் ஒன்று பழைய மீன் சந்தைக்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த வள நிலையத்தில் உக்காத பொருட்களை ஒப்படைக்க முடியும். அவ்வாறு வழங்கும் கழிவுப் பொருட்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு ஆயிரம் புள்ளிகள் சேர்ந்தவுடன் அதற்கான பணம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் உக்காத கழிவுப் பொருட்களை சேகரித்து வழங்கி பத்தாயிரம் புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு கூட இன்னமும் அதற்கான கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இதனால் வள நிலையத்திற்கு உக்காத கழிவுகளை சேகரித்து வழங்கும் செயற்பாடு மந்த கதியில் காணப்படுகிறது.

கழிவுகளை சேகரித்து வழங்குபவர்களுக்கு உரிய கொடுப்பனவை துரிதப்படுத்தி வழங்கி பொதுமக்களை ஊக்குவிக்க வேண்டும். இதனூடாக குறித்த வள நிலையம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தை அடைந்து தூய நகரத்தை கட்டியெழுப்ப முடியும். எனவும் மேலும் அவர் தெரிவித்தார். (4-6-30)



யாழ்.மாவட்ட மலேரியா தடுப்பு பிரிவினரால் நேற்று வியாழக்கிழமை காலை சாவகச்சேரி-மதுவன் சனசமூக நிலையத்தில் மலேரியா நோய்க்கான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. (படம்: சுபேசன்)

## திருப்பாடுகளின் நாடக ஆற்றுகைக்கான பிரதி வழங்கும் வைபவம்



(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் வருடாந்த செயற்பாடுகளின் நிகழ்வொழுங்கில் முதலிடம் பெறுகின்ற திருப்பாடுகளின் நாடக ஆற்றுகைக்கான பிரதி வழங்கும் வைபவம் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தின ஆரம்ப நாளாகிய நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் "கலை ஞான சுரபி" தியான இல்லத்தில் சுகாதார நடைமுறைகளுக்கமைய இடம்பெற்றது. இந்நிகழ்வானது திருமறைக் கலா மன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் இடம் பெற்றதோடு முதன்மை விருந்தினராக யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருள்திரு பா.யோ. ஜெபரட்ணம் அடிகளார் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.

அத்துடன் இவ்வாண்டு "களங்கம்" என்னும் நாடகமே மேடையேற்றப்படவுள்ளது. மேலும் கடந்த ஆண்டு கொரோனா பரவல், முடக்க நிலை காரணமாக குறித்த நிகழ்வு நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (4-6)

# பாடசாலையை மீள இயங்க வைக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை

(வரணி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட மாசேரி வரணி கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள யா/ஸ்தான அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையானது யுத்த சூழ்நிலை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து பிற பிரதே சங்களுக்குச் சென்றமையால் 2000 ஆம் ஆண்டு மூடப்பட்டது.

பின்னர் மக்கள் மீளவும் குடியமர்ந்து தமது அன்றாட நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்ற போதிலும் இதுவரைக்கும் இப்பாடசாலை மீளவும் இயக்கப்படவில்லை. இதனால் இக்கிராமத்து பிள்ளைகள் அயல் பிரதேச பாடசாலைகளுக்கும், நகரப் பாடசாலைகளுக்கும் சென்று கல்வி கற்று வருகின்றனர்.

மேலும் இப்பாடசாலை யின் ஓடுகள், மரங்கள் போன்றவையும் இனம்தெரியாதேரால் கழற்றிச் செல்லப்பட்டுள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவிப்பதோடு குறித்த காணியினை அபகரிக்கும் முயற்சிகளும் நடைபெற்றதாகவும் தெரிவித்தனர்.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு மீளவும் இப் பாடசாலையை இயங்கவைப்பதற்கான நடவடிக்கையினை வடமாகாண கல்வியமைச்சு மேற்கொள்ள வேண்டும் எனவும் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்தனர். (4-6-103)

# அதிகரித்துவரும் திருட்டுச்சம்பவங்கள்

(ஏழாலை)

கடந்த சில வாரங்களில் ஏழாலைப் பகுதியில் குறிப்பாக மேற்கு மற்றும் மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் திருட்டுக்கள் அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றன.

இரவு நேரங்களை விட கூடுதலாக பட்டப்பகல் வேளைகளிலே திருட்டுச் சம்பவங்கள் அதிகமாக காணப்படுகின்றன.

மின்சாதனங்கள், கையடக்கத்தொலைபேசிகள் திருடப்பட்டதோடு அண்மையில் ஏழாலை முடி மன்னர் ஆலய உண்டியலும் உடைக்கப்பட்டு திருடப்பட்டது.

எனவே பொதுமக்கள் இது குறித்து விழிப்பாக இருக்குமாறும் இதற்குரிய நடவடிக்கையை பொலிஸார் விரைந்து மேற்கொள்ளுமாறும் கிராம மட்ட அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (4-26)

# இரு தரப்பும் நன்மையடையும் வகையில் தீர்வு
## இந்தியத் தூதரகம் அறிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவும் இலங்கையும் இணைந்து இரு தரப்பும் நன்மையடையும் வகையில், திருகோணமலை எரிபொருள் தாங்கிகளை அபிவிருத்தி செய்ய இந்தியா தயாராகவுள்ளது என இலங்கைக்கான இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

திருகோணமலை எரிபொருள் தாங்கிகளை மீண்டும் இலங்கை வசமாக்குவது குறித்து கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே மற்றும் இலங்கை தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

திருகோணமலை எரிபொருள் தாங்கிகள் அனைத்தும் வெகுவிரைவில் இலங்கை வசமாகும் எனவும் சக்தி வலு அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார். அமைச்சரின் கருத்துக்குப் பதிலளித்துள்ள, இந்தியத் தூதரகம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளது. (நி-4)

# நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு திட்டம்
## விவசாய அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பாரியளவான பண்ணைகளை உருவாக்க 3 பெருந்தோட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி வருவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, நாள் ஒன்றில் ஒரு லட்சம் லீற்றர் பாலினை உற்பத்தி செய்வதற்காக 4,500 கறவை பசுக்களை இறக்குமதி செய்வதற்கு குறித்த பெருந்தோட்ட நிறுவனங்கள் இணக்கம் வெளியிட்டுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

உள்நாட்டில் 40 சதவீத பால் உற்பத்தியே மேற்கொள்ளப்படுகின்ற நிலையில், வருடாந்தம் பால்மாவை இறக்குமதி செய்வதற்காக 55 பில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவிடுகின்றது. தற்போதைய தரவுகளுக்கமைய கறவை பசு ஒன்றிடம் சுமார் 2.5 லீற்றர் அளவிலான பாலே பெற முடிகின்ற நிலையில் இந்த புதிய வேலைத் திட்டத்தின் கீழ் அதனை 5 லீற்ற ராக அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-4)


## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி கூறுவிலை கோரல்

எமது வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் பாவனைக்கு **12KV** வலுவுடைய மின்பிறப்பாக்கி ஒன்று புதிதாகக் கொள்வனவு செய்வதற்கு தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் நவாலி தெற்கில் அமைந்துள்ள எமது தொழிற்சாலையில் கொண்டுவந்து பொருத்தி விடுதல் உள்ளடங்கலான கூறுவிலையும் உத்தரவாத காலத்தையும் **Model** ஐயும் குறிப்பிட்டு எதிர்வரும் 01.03.2021ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரில் சமர்ப்பிக்கவும்.

(C-1468)

**திரு.செ.செல்வராசா**
**தலைவர்,**
**வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி.**

**பிப்பிலிச் சந்தி,**
**மானிப்பாய்.**



## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி கூறுவிலை கோரல்

எமது வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பாவிப்பதற்கு ஒரு தடவை மட்டும் பாவிக்கப்பட பின்வரும் விபரப்படியான அளவுடைய வெற்றுப் போத்தல்கள் கொள்வனவு செய்வதற்கு தகுதியானவர்களிடம் இருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

**375ml** வெற்றுப் போத்தல்கள்
**180ml** வெற்றுப் போத்தல்கள்

கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 01.03.2021ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரில் சமர்ப்பிக்கவும்.

(C-1467)

**திரு.செ.செல்வராசா**
**தலைவர்,**
**வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி.**

**பிப்பிலிச் சந்தி,**
**மானிப்பாய்.**



## வாடகைக்கு

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு சொந்தமான கே.கே.எஸ் வீதி,கொக்குவிலில் மேல் மாடியில் இரண்டு அறைகள் வாடகைக்கு உள்ளன. இதனைப் பெற விரும்புபவர்கள் 2021.02.28ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு நேரடியாக கடிதத்துடன் வரவும். இறுதித் தீர்மானம் நிர்வாக சபையால் தீர்மானிக்கப்படும்.

## கூறுவிலை கோரல்

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு **C.C.T.V CAMERA** பொருத்துவதற்கு கூறுவிலை கோரப்படுகிறது. இதனைப் பெற விரும்புபவர்கள் 2021.02.28ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு நேரடியாக கடிதத்துடன் வரவும். இறுதித் தீர்மானம் நிர்வாக சபையால் தீர்மானிக்கப்படும்.

(5825)

**நிர்வாக சபையினர்**
**கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்**
**(புதுக்கோவில்)**



## முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்-2021

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் 07.03.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். பதிவு செய்த அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புதிய அங்கத்தவர்கள் 28.02.2021 காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 12.00 மணிவரை பாடசாலையில் நேரடியாகப் பதிவுகளை மேற்கொள்ளலாம் அல்லது விண்ணப்பப் படிவத்தினை பழைய மாணவர் சங்கத்தின் முகநூல் பக்கத்தினூடாக **(www.facebook.com/vidyananda.college)** தரவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் மென்பிரதியை 03.03.2021 இற்கு முன்னர் பழைய மாணவர் சங்கத்தின் மின்னஞ்சலூடாக **(vidyanandaosa@gmail.com)** அனுப்புவதன்மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு 0777402307/ 0779362643/ 0773643971**

(5826)



வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்



## மனவளக்கலை யோகப் பயிற்சிகள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில் பெருமையுடன் வழங்கும் எளிய முறை யோகப் பயிற்சிகள். அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- எளிய முறை உடற்பயிற்சிகள்
- எளிய முறை தியானப் பயிற்சிகள்
- காயகல்பப் பயிற்சிகள்
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம்:- எதிர்வரும் 20.02.2021 சனிக்கிழமை தொடக்கம் 26.02.2021 வெள்ளி வரை
நேரம்:- மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணிவரை
பயிற்சி வழங்குபவர்:- துணைப்பேராசிரியர் ந.நந்தகுமரன் அவர்கள்

குறிப்பு:கொவிட்-19 சமூக பாதுகாப்பு விதிகளுக்கமைவாக பயிற்சிகள் வழங்கப்படுவதால் மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியாளர்களே உள்வாங்கப்படுவர்.

தொடர்புகளிற்கு:- யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்
இல.81,பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவில், யாழ்ப்பாணம்
தொ.இல. 021 222 2772

(C-1466)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இன்னமும் தீர்வு கிடைக்காத இந்திராபுரம் கிராமம்

(கண்டாவளை)

**அண்மையில் பெய்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இன்று வரை எமக்கான எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை என இந்திராபுரம் கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மீள் குடியேற்ற கிராமமான இந்திராபுரம் கிராமத்தில் குடியேறி தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் குடும்பங்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர். கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராமங்களில் ஒன்றாகக் காணப்படும் இந்திராபுரம் கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் சுமார் 27 வருடங்களுக்கு பின்னர் தமது சொந்த இடங்களில் தற்போது மீள் குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு தற்காலிக வீடுகளில் வசித்து வரும் நிலையில் அண்மையில் பெய்த மழை வெள்ளம் காரணமாகவும் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். இன்றும் தமக்கான நிரந்தர திட்டங்களைப் பெற்றுத் தர வேண்டும் என பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

கடந்தகால யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளிலும் தங்கியிருந்து 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவு பெற்ற பின்னர் வேறு பிரதேச மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறிய போதும் இந்திராபுரம் முகமாலை உள்ளிட்ட பகுதிகளில் வெடி பொருள் ஆபத்துக்காரணமாக பலகாலமாக மீள்குடியேற முடியாத நிலை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-6-315)

# மேம்பாலம் அமைத்துத்தருமாறு பொதுமக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு தாழ்பாலத்தினை மேம்பாலமாக மாற்றுமாறு அம்பலப்பெருமாள் குளம், கோட்டைகட்டிய குளம் கிராம மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் அம்பலப் பெருமாள்குளம் கிராமத்திற்கு சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தினை நடத்துவதற்கு வருகை தந்த துணுக்காய் பிரதேச செயலாளர் அடங்கிய அதிகாரிகளிடமே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் மழை காலங்களில் கோட்டை கட்டிய குளம் வான் பாய்கின்ற காலத்தில் குறித்த தாழ்பாலப் பகுதியில் போக்குவரத்துகள் துண்டிக்கப்படுவதாகவும் கோட்டை கட்டியகுளம் மகா வித்தியாலயத்திற்கு மாண வர்கள் செல்ல முடியாத நிலைமை ஏற்படுவதாகவும் கடந்த பத்தாண்டுகளாக தாழ் பாலத்தினை மேம்பாலமாக மாற்றுமாறு தாம் விடுத்த கோரிக்கை தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் கிராம மக்களால் தெரிவிக்கப்பட்டது. (4-6-350)

# ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற வளாகத்திலுள்ள பழைய இரும்புகள் ஏல விற்பனை நாளை 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம் பெறவு ள்ளது.

ஏல விற்பனைக்கான பொருட்களை ஏலம் ஆரம்பிப்பதற்கு அரைமணி நேரம் முன்பு பதிவாளர் அனுமதியுடன் பார்வையிடமுடியும்.

அத்துடன் ஏலத்திற்கு வருகை தரும் அனைவரும் சுகாதார நடைமுறையை பின்பற்றி வருகை தருமாறும் நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-6)

# கிராமப்புறங்களில் அதிகரித்துவரும் நூதன முறையிலான திருட்டுக்கள்

## பொதுமக்கள் அவதானம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் பணம் தருவதாகக் கூறி நூதனமான முறையில் பொதுமக்களை ஏமாற்றும் சம்பவங்கள் பதிவாகி வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.


குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

கிராமப்புறங்களில் வசிக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் தொலைபேசி இலக்கங்களை பெற்று மர்ம நபர்கள் அவர்களிற்கு அழைப்பை ஏற்படுத்தி அவர்களது குடும்ப சூழல் தொடர்பாக விசாரித்து அனுதாபம் தெரிவித்தனர்.

பின்னர் அவர்களிற்கு பண உதவி செய்வதாக தெரிவித்து பணத்தினை உங்களுக்கு வழங்க வேண்டுமானால் சிறுதொகை பணத்தினை ez cash மூலம் தமது தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவித்துள்ளனர். பணத்தினை அனுப்பிய சற்றுநேரத்தில் உங்களது பணம் வங்கிக் கணக்கில் வைப்பிடப்படும் என்று நம்ப வைத்துள்ளனர்.

இதனை நம்பி பலர் 3 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் ரூபாய் வரையிலான பணத்தினை அனுப்பியுள்ள னர். அதன் பின்னர் குறித்த நபர்களின் தொலைபேசி இலக்கம் நிறுத்தப்பட்ட நிலையில் தாம் ஏமாற்றப்பட்டுள்ளதை மக்கள் உணர்ந்துள்ளனர்.

குறித்த சம்பவங்கள் வவுனியாவின் கிராமப்புறங்களில் அதிகமாக பதிவாகிவருகின்ற நிலையில் பொது மக்கள் இந்த விடயத்தில் அவதானமாக இருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-299)



முல்லைத்தீவு மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்பினை மேம்படுத்தும் நோக்கில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மீனவ சங்கங்களிற்கு மீன்பிடி வள்ளங்கள் நேற்று முன்தினம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது. (படம்-தவசீலன்-யதுபாஸ்கரன்)

# ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு பகுதிகளுக்கு துரித பேருந்து சேவை தேவை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாங்குளத்தில் இருந்து ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு ஆகிய கிராமங்களுக்கு கூடுதலான பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என அப்பகுதி பொது அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

மாங்குளத்தில் கூடுதலான பயணிகள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் காலை வேளையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், முத்தையன்கட்டுப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்கின்ற உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இப் பிரச்சினை தொடர்பான பல்வேறு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-6-350)

# இறங்கு துறைகள் இன்றி சிரமப்படும் கிளி. மீனவர்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடற்கரையோரக் கிராமங்களில் காணப்படுகின்ற இறங்கு துறைகள் மற்றும் கடற்கரை வீதிகள் என்பவற்றைப் புனரமைத்துத் தருமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள பள்ளிக்குடா, வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு போன்ற பகுதிகளில் உள்ள கடற்கரை ஓரங்களில் இறங்கு துறைகள் இன்றி சிரமங்களை எதிர்கொள்வதாக இப்பகுதி கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பூநகரிப் பிரதேச கரையோரப் பகுதிகளில் அதிகமானவை மண் திட்டுக்களாக காணப்படுகின்றன. இதனால் படகுகள், மீன்பிடி உபகரணங்கள் என்பவற்றை கரை சேர்ப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக பிரதேச கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பூநகரிப் பிரதேசத்துக்கு உட்பட்ட கிராமங்களில் கடலுக்குச் செல்லும் வீதிகள் யாவும் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையால் போக்குவரத்து செய்ய முடியாத நிலையும் காணப்படுகின்றது. இதனால் கடற்றொழில் உபகரணங்களை கொண்டு செல்வதிலும் கடற்றொழிலுக்குச் சென்று திரும்புவதும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட நீரியல்வளத்துறை திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் குறிப்பிடுகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற அனைத்து இறங்கு துறைகளும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேவை உள்ளது. அத்துடன் அதிகளவான கடற்கரை வீதிகளும் புனரமைக்கப்பட வேண்டி உள்ளது. அண்மையில் வீசிய புயல் காரணமாக கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள், மீன்பிடி உபகரணங்கள் சேதமடைந்துள்ளன என மேலும் தெரிவித்தார். (4-6-315)



# இருவேறு குற்றச்சாட்டில் எண்மர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய தருமபுரம் புன்னை நீராவி பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியிலீடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவரும் குமாரசாமிபுரம் பகுதியில் 06 போத்தல் கசிப்பு விற்பனைக்கு தயார்நிலையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரும் புளியம்பொக்கணை, கல்லாறு, பிரமந்தனாறு பகுதிகளில் அனுமதிப்பத் திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஐவரும் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் .

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கின்சிலி கேரத் தெரிவித்தார்.

(4-6-316)

## இராசிபலன்

**19.02.2021**
**மாசி 07, வெள்ளிக்கிழமை**
**சப்தமி முற்பகல் 10.28 மணிவரை**
**கார்த்திகை பின்னிரவு 5.10 மணிவரை**
**சுபநேரம் 6.32-8.02 மணிவரை**
**இராகுகாலம் 11.02-12.32 மணிவரை**
**சந்திராஷ்டமம் : சுவாதி**
**கார்த்திகை விரதம்**

**மேஷம்** – யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** – வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசு பவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** – எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், வழிபாட் டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டு வீர்கள்.

**கடகம்** – குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங் கள் கைகூடும் வாய்ப்புண்டு, எடுத்த காரி யங்கள் எளிதில் கைகூடும், போசன சுக முண்டு.

**சிம்மம்** – செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டு வீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற் படுவீர்கள், தூரதேசத்திலிருந்து சுப செய் திகள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந் தனை மேலோங்கும் நாள்.

**கன்னி** – மறைமுக எதிர்ப்புகள் மாறும், வம்பு வழக் குகள் தீர்ந்து வளம் காணும் நாள், அதிகம் செலவாகுமென நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம்.

**துலாம்** – சில பிரச்சினைகளைக் கண்டும் காணா மலும் இருப்பது நல்லது, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், பய ணங்களின் போது விழிப்புணர்வு அவசி யம்.

**விருச்சிகம்** – தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** – புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கடன் சுமை குறைய புதிய வழி யைக் கையாள்வீர்கள், எடுத்த காரியங் களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்** – ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வீட்டு உபயோகப் பொரு ட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டு வீர்கள்.

**கும்பம்** – வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்து ழைப்பு கிடைக்கும், சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், செய்தொழிலில் ஆர்வம் கூடும்.

**மீனம்** – பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ் வீர்கள், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**அமைதியாக வாழ எதையும் விட்டுக் கொடுக்கலாம்.**

# சூரிய மின் உற்பத்திக்காக மூன்று தீவுகளை சீனாவுக்கு வழங்குவது பற்றி இறுதி முடிவில்லை

## என்கிறார் மின்சக்தி அமைச்சர்

(கொழும்பு)

**யாழ்ப்பாணம் தீவகத்தில் உள்ள மூன்று தீவுகளில் சூரிய மின்சக்தி திட்டங்களை உருவாக்க சீனாவுக்கு வழங்குவது குறித்து அரசு இறுதி முடிவு எடுக்கவில்லை என்று மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.**

ஆசிய அபிவிருத்தி வங் கியிடமிருந்து 12 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி வச தியுடன் வடக்கில் நெடுந்தீவு நயினாதீவு மற்றும் அன லைதீவில் புதுப்பிக்கத்தக்க மின் திட்டங்களை உரு வாக்க சீன நிறுவனம் ஒன் றுக்கு வழங்குதென அமைச் சரவை ஜனவரி நடுப்பகு தியில் முடிவு செய்தது.

இந்த நடவடிக்கையால் பாதுகாப்பு காரணங்களை முன்வைத்து இந்தியாவால் ஆட்சேபனை தெரிவிக்கப் பட்டது.

கொழும்பில் உள்ள இந் தியத் தூதுவர் தனது அரசின் ஆட்சேபனையைத் தெரி வித்ததாக டலஸ் குறிப்பிட் டார். (நி-4)

# சுகாதார அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளை நடத்த தடையில்லை

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

மாணவர்களை அதிகமாக அணிதிரட்டாமல் மாணவர் களின் மனப்பான்மை மற்றும் திறன்களை வளர்ப்பதற்கு சுகா தார அமைச்சினால் பரிந்து ரைக்கப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளை நடத்துவதற்கு எந்த தடையும் இல்லை என்று கல்வி அமைச்சு அறிவித் துள்ளது.

பாடசாலை மேம்பாட்டுக் கான உத்தியோகபூர்வ அரச விழாக்கள் மற்றும் சுகாதார விதிமுறைகளின்படி ஏற்பாடு செய்யக் கூடிய நிகழ்ச்சிகளும் நடத்தப்படலாம் என்று அமை ச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

பேச்சுப் போட்டிகள், விவா தப் போட்டிகள் போன்ற போட்டி களும் மற்றும் மரம் நடும் திட்டங்களும் பாடசாலையில் நடத்தப்படலாம்.

அதற்கு எந்த தடையும் இல்லை என அதில் தெரி விக்கப்பட்டுள்ளது. (நி-4)

# திருட்டுத்தனமாக தடுப்பூசி போடும் அமைச்சர்களின் குடும்பங்கள்

## ஐ.ம.ச. குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமைச்சர்கள் மற்றும் அவர் களின் குடும்பத்தினருக்கு திரு ட்டுத்தனமாக கொரோனா தடுப் பூசி ஏற்றப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்ஹேஷா விதானகே இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்க ளுக்கு தடுப்பூசி வழங்கப்படு வதாக காட்டிக்கொண்டு, அவர் களின் குடும்ப உறுப்பினர்க ளுக்கு தடுப்பூசிவழங்கப்பட்டுள் ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் கடைசி குடிமக னுக்கு தடுப்பூசி செலுத்தப்ப டும் வரை தான் தடுப்பூசி செலுத் திக்கொள்ள போவதில்லை எனவும் அவர் தெரிவித் தார். (நி-4)

# கொரோனாவில் இருந்து மீண்டவர் மூச்சுத் திணறலால் மரணம்

(கொழும்பு)

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு மீண்டு வந்த பெண் ஒருவர் மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள் ளது.

மஹியங்கனையில் உள்ள தொழிற்சாலையில் பணிபுரிந்த பெண் கடந்த ஐந்தாம் திகதி கொரோனா வைரஸால் பாதிக் கப்பட்ட நிலையில் சுகாதார அமைச்சின் சிகிச்சை நிலை யத்தில் அனுமதிக்கப்பட்டிருந் தார்.

10 நாட்கள் தனிமைப்படுத் தலின் பின்னர் குணமடைந்து விட்டார் என அறிவிக்கப்பட்ட நிலையில் குறிப்பிட்ட பெண் வீட்டில் நான்கு நாட்கள் தனி மைப்படுத்தலை முன்னெடுத் துள்ளார்.

எனினும் சுவாசிப்பதில் பிரச் சினை ஏற்பட்டதைத் தொடர் ந்துபதுளை தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள் ளார். (நி-4)

# உயிருடன் இருந்தால் கைது செய்வோம்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்கு தலுடன் தொடர்புபட்ட சாரா என்பவர் இந்தியாவில் உள் ளாரா? என்பது குறித்து உறு தியான தகவல்கள் இன்னமும் கிடைக்கவில்லை. சாய்ந்த மருது தற்கொலை தாக் குதலில் சாராவும் உயிரிழந் திருப்பதாகவே நம்பப்படுகின் றது. எனினும் இவற்றை உறு திப்படுத்த மரபணு பரிசோத னைகள் முன்னெடுக்கப்படு வதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரி வித்தார். சாரா உயிருடன் இருப்பாரெனின் நிச்சயமாக அவர் கைது செய்யப்படுவார் எனவும் பொதுமக்கள் பாது காப்பு அமைச்சில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் தெரிவித்தார். (நி-4)



# சிறுவர் அரங்கம்

## மனிதனுக்கு அழகைவிட அறிவே முக்கியம்

பீர்பாலை மன்னர் முன் முட்டாளாக்க வேண்டும் என்று சில அமைச்சர்கள் ஏடாகூடமாகக் கேள்விகள் கேட்டு, அதன்மூலம் அவர்களே முட்டாள்களாகிப்போவது தொடர் கதை.

அப்படி ஒருநாள், அக்பரின் அவையில், அமைச்சர்கள், பீர்பால் எல்லாரும் அமர்ந்திருக்க, ஒரு அமைச்சர் பீர்பாலைப் பார்த்து மிகவும் ஏளனமாகச் சிரித்தார்.

மன்னர் "ஏன் அப்படி சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டார். "மன்னா, தங்கத்தால் செய்த உடல்போல நீங்கள் மின்னுகிறீர்கள், நாங்களும் சிவந்த உடல் கொண்டு, இங்கே இருக்க, பீர்பால் மட்டும் கருத்த நிறத்தில், இந்த அவைக்கு பொருத்தமில்லாமல் மாறுபட்டவராக இருக்கிறார்" என்று சிரித்தார். அவர்கள் பீர்பாலை அவமானப்படுத்த இப்படி சிரிக்கிறார்கள் என்று உணர்ந்து "பீர்பால்! அமைச்சர் சொல்லுவதற்கு பதில்கூறும்! உம்முடைய பதில் ஆணித்தரமாக இருக்கட்டும்" என்றார்.

பீர்பாலும் மன்னரை வணங்கி "மன்னா! இறைவன் எல்லோரையும் சமமாகவே நடத்தி, நம்மைப் படைப்பதற்கு முன்னால் எல்லோரையும் உங்களுக்கு என்னவேண்டும் என்று கேட்கிறான்..

நீங்களெல்லாம் எனக்கு நல்ல சிவந்தநிறமுடைய தோல் வேண்டும் என்று கேட்டீர்கள்.. உங்களுக்குக் கிடைத்தது.. எல்லோரும் இறைவனிடம் சிவந்த நிறமே கேட்டதால், இறைவனிடம் அறிவு நிறைய தேங்கிவிட்டது.



நான் இறைவனிடம் எனக்கு நல்ல அறிவைத் தாருங்கள் என்று கேட்டு வாங்கி வந்தேன். அது தான் உங்கள் நிறம் சிவப்பாக இருக்கிறது நான் வேறு விதமாக இருக்கிறேன்" என்று பதிலளித்தார்.

புன்முறுவல் பூத்த அக்பர் "பீர்பால்! நீங்கள் சொன்ன சிவந்தநிறம் பெற்ற கதையில், நானும் இருக்கிறேனா" எனக் கேட்டார்.

"மன்னா! நீங்கள் தான் இறைவனிடம், சிவந்த நிறத்துடன் எனக்கு பீர்பாலும் அமைச்சராக வேண்டும் என்றுகேட்டு என்னையும் பெற்றுக் கொண்டீர்களே!" என்று பீர்பால் கூற, அக்பர் அழகைவிட அறிவே முக்கியம் என்று பீர்பால் உணர்த்திய நகைச்சுவையை வெகுவாக இரசித்து மகிழ்ந்தார்.

## மகா அலெக்சாண்டரின் வரலாறு

### சிரஞ்சீவி அலெக்சாண்டர்

121

குறிப்பாக ஆசியப் போரில் ஈடுபட்டிருந்த சமயத்தில் அவர் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு உரிய தண்டனைகளை வழங்கினார்.

அடுத்த முக்கியமான காரியமாக தன்னுடைய படையினரைச் சீரமைக்கும் பணியைத் தொடங்கினார்.

அதன் ஒருபகுதியாக கிரேக்கர் அல்லாதவர்களும் அலெக்சாண்டரின் படைக்குள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்கிற அறிவிப்பை வெளியிட்டார்.

இது வழக்கத்திற்கு மாறான விடயம் என்பதால் மற்ற கிரேக்க வீரர்களிடையே ஒரு வித மனக்கசப்பு ஏற்பட்டது. கலகம் போன்ற



சூழல் உருவானது.

சம்பந்தப்பட்ட இடத்திற்கு உடனடியாக விரைந்த அலெக்சாண்டர் அவர்களை எல்லாம் மிகுந்த இலாவகமாகச் சமாதானம் செய்து பேசினார்.

நாம் பெற்றவை ஏராளம். அதற்காக இழந்த உயிர்களும் ஏராளமோ ஏராளம். நம் படைக்குப் பலம் சேர்க்க வீரர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டிய கட்டாயமாகிறது.

சில மாற்றங்களை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

அலெக்சாண்டரே சொன்னபின் யாரால் எதிர்த்துப் பேச முடியும். எதிர்த்துச் சிந்திக்கக்கூட முடியாதே. கிரேக்கர் அல்லாதவர்களும் அலெக்சாண்டரின் படையில் இணையத் தொடங்கினார்கள்.

படைபலம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்க ஆரம்பித்தது. ஆனால் அலெக்சாண்டரின் மனதில் ஒரு புதிய எண்ணம் உதித்திருந்தது. அரேபியா, ஆபிரிக்கா, ஐரோப்பா நாடுகளையும் கைப்பற்ற வேண்டும். அடுத்து அவை தான் கைப்பற்றுவேன்.

சில செய்திகள் மாவீரர்களையும் ஒடுங்கி உட்காரவைத்துவிடும். அப்படி ஒரு செய்து வந்து சேர்ந்தது. இது அலெக்சாண்டரின் நெருங்கிய நண்பர்களுள் ஒருவரான ஹெபஸ்டியோனின் மரணச் செய்தி. மனநீதியாக மிகவும் பலவீனமடைந்து போனார் அலெக்சாண்டர்.(தொடரும்)

# கடும் பனிப்பொழிவால் திணறும் அமெரிக்கா மின்சாரம் இன்மையால் தவிக்கும் மக்கள்

## இதுவரை 21 பேர் உயிரிழப்பு





(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் வரலாறு காணாத பனிப்பொழிவு நிலவி வருகிறது. வீடுகள், கார்கள், வீதிகள், மரங்கள் என அனைத்தும் உறை பனிக்குள் மூழ்கி கிடக்கின்றன. நீர்வீழ்ச்சிகளும் பனி சிற்பங்களாக உறைந்து காணப்படுகின்றன.

குளிர் அதிகரிப்பதால் மின்சார தேவை அதிகரித்து உள்ளது. ஆனால், பனிப்பொழிவால் மின் கட்டமைப்பு முடங்கி உள்ளதால், தேவைக்கு ஏற்ப உற்பத்தி செய்ய முடியாத நிலை உள்ளது.

எனவே, கடந்த நான்கு நாட்களாக சுமார் 34 லட்சம் மக்கள் மின்சாரமின்றி பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

மின்தடை காரணமாக பெரும்பாலான பகுதிகள் இருளில் மூழ்கி உள்ளன. வீதிகளில் பனிக்கட்டிகளை அகற்றி போக்குவரத்தை சரி செய்யும் பணி தீவிரமாக நடைபெறுகிறது.

அங்கு பனி அதிகரித்து வரும் நிலையில் கடும் குளிருக்கு இதுவரை 21 பேர் உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெக்சாசில் இவ்வாறு பனிப்பொழிவு அதிகரித்ததற்கான காரணம் குறித்து வானிலை ஆய்வாளர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

பருவநிலை மாற்றம் காரணமாக இது போன்ற நிகழ்வுகள் நடைபெறலாம் என்றும் கூறப்படுகிறது. (நி-4)

# தீவிரவாதிகளின் அச்சுறுத்தலால்

## 31 ஆண்டுகளுக்கு பின் திறக்கப்பட்ட கோவில்



(டில்லி)

காஷ்மீரில் கடந்த 1980-ம் ஆண்டு காலகட்டங்களில் தீவிரவாத அச்சுறுத்தலால் ஸ்ரீநகரில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஷீத்தல் நாத் கோயில் 1990-ம் ஆண்டு மூடப்பட்டது.

இந்நிலையில், தீவிரவாத அச்சுறுத்தல் குறைந்திருப்பதை கருத்தில் கொண்டு, 31 ஆண்டுகளின் பின் நகரில் உள்ள ஷீத்தல் நாத் கோயில் நேற்று முன்தினம் மீண்டும் திறக்கப்பட்டு சிறப்பு பூஜைகளும், வழிபாடுகளும் நடத்தப்பட்டன. (நி-4)

# விண்வெளி வீரர்களுக்கான புதிய உணவு கண்டுபிடிப்பவர்களுக்கு 5 லட்சம் டொலர் பரிசு

## நாசா அறிவிப்பு

(வோஷிங்டன்)


செவ்வாய் கிரகத்திற்கு செல்லும் விண்வெளி வீரர்களுக்கான புதிய உணவு முறையை கண்டுபிடித்தால் 5 லட்சம் டொலர் பரிசு வழங்கப்படும் என நாசா அறிவித்துள்ளது.

இந்நிலையில், போட்டியாளர்கள் செவ்வாய் கிரகத்திற்கு பயணம் செய்ய உள்ள விண்வெளி வீரர்களுக்கு அவர்களின் பயணத்தின் போது பொருத்தமான புதுமையான உணவுகளையும், அவற்றுக்கான தயாரிப்பு முறைகளையும் கண்டுபிடித்து கூற வேண்டும்.

வரும் மே மாதம் 28 வரை பெயரை பதிவு செய்து ஜூலை 30 க்குள் தங்களது கண்டுபிடிப்பு விபரங்களை தெரிவிக்க வேண்டும் என நாசா தெரிவித்துள்ளது.

ஆனால் அமெரிக்கர்களுக்கு மட்டுமே இந்த போட்டியில் பங்கேற்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதர நாடுளை சேர்ந்தவர்களும் பங்கேற்கலாம், ஆனால் பரிசு கிடையாது.

ஏற்கனவே மிகவும் அதிக கலோரிகள் கொண்ட சொக்கலேட் பார்கள் விண்வெளி வீரர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)



தெலுங்கானா முதல்வரின் பிறந்த நாளையொட்டி ஐதராபாத்தில் உள்ள எல்லம்பள்ளி அம்மனுக்கு 2.5 கிலோ எடையுள்ள தங்கப் புடைவையை நேற்று முன்தினம் காணிக்கையாக வழங்கினார் அமைச்சர் நிவாச யாதவ்.

# இந்தியாவில் முதன்முறையாக தூக்கிலிடப்படும் பெண் குற்றவாளி

(டில்லி)

இந்தியா பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுதலை பெற்ற பின் முதன் முறையாக பெண் குற்றவாளி ஒருவர் தூக்கிலிடப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசத்தில் அம்ரோஹா மாவட்டத்தைச் சேர்ந்த ஷப்னம் என்ற பெண்ணே மேற்படி தூக்கிலிடப்படவுள்ளார்.

குறித்த பெண் கடந்த 2008 ஆம் ஆண்டு தன்னுடைய காதலருடன் சேர்ந்து தனது பெற்றோர் உட்பட ஏழு பேரை கத்தியால் குத்தி கொலை செய்துள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், குறித்த இருவருக்கும் மாவட்ட நீதிமன்றத்தில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இந்தத் தண்டனையை அலகாபாத் உயர்நீதிமன்றம் கடந்த 2010 இலும், உச்ச நீதிமன்றம் 2015 இலும் உறுதி செய்துள்ளன.

நாடு சுதந்திரம் அடைந்த பின் பெண் குற்றவாளி யாரும் தூக்கிலிடப்படவில்லை. மதுரா



வில் தான் ஷப்னத்துக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது.

அவருக்கு தண்டனையை நிறைவேற்றுவதற்கான திகதி விரைவில் முடிவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## டெங்கால் சிறுமி பலி

(கொழும்பு)

டெங்குநோய் தொற்றுக்குள்ளான சிறுமி ஒருவர் திருகோணமலையில் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்த 7 வயதுச் சிறுமி ஒருவர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளான நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது. (நி-4)

## புகழ் பூத்த பாடகர் எஸ்.ஜி.சாந்தனின் சிலை அமைக்க பிரதேச சபை இணக்கம்

(பனிக்கன்குளம்)

ஈழத்தின் புகழ் பூத்த பாடகரும் உலகத்தமிழ் உறவுகள் அனைவரின் உள்ளங்களிலும் நீங்காத இடம்பிடித்த எஸ்.ஜி. சாந்தனுக்கு மாங்குளத்தில் சிலை அமைக்க புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் ஏகமனதாக பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது

அண்மையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் இவ்வாண்டுக்கான இரண்டாவது சபை அமர்வு தவிசாளர் ஆ.தவக்குமார் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் முத்துசாமி முகுந்தகஜனால் குறித்த பிரேரணை சபையில் கொண்டு வரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பல்வேறு வாதப்பிரதிவாதங்களை தொடர்ந்து குறித்த பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டது.

குறித்த மாங்குளம் நகர்ப் பகுதியில் பிரேரணை கொண்டு வந்த உறுப்பினரால் அடையாளப்படுத்தப்பட்ட மூன்று இடங்களில் பொருத்தமான இடத்தை தெரிவு செய்து அந்த இடத்தில் சிலை அமைப்பது என தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் 26 ஆம் திகதி மாங்குளம் பிரதேச சபை கட்டட மண்டபத்தில் அவரது நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-281)

## குடையிற் சுவாமிகள் குருபூசை தினம் இன்று

(குப்பிழான்)

ஈழத்துச் சித்தர் குடையிற் சுவாமிகளின் வருடாந்தக் குருபூசை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை கோண்டாவில் கிழக்கு ஸ்ரீஅற்புத நர்த்தன விநாயகர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள குடையிற் சுவாமிகளின் சமாதி ஆலயத்தில் இடம்பெறும்.

இன்று காலை 8 மணி முதல் குடையிற் சுவாமிகளின் குருபூசையை முன்னிட்டு திருவாசக முற்றோதல் நிகழ்வும் தொடர்ந்து குருபூசை நிகழ்வுகளும் நடைபெறும் என மேற்படி ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (4-18)

## 11 மஞ்சள் மூடைகள் கைப்பற்றப்பட்டன

(புத்தளம்)

இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட சுமார் ஆயிரம் கிலோ கிராம் மஞ்சள் புத்தளத்தில் கைப்பற்றப்பட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, புத்தளம் - மன்னார் வீதியின் இரண்டாம் கட்டை பகுதியில் அமைந்துள்ள உப்பளமொன்றில் சுற்றி வளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 11 மூடைகளில் பொதியிடப்பட்டிருந்த நிலையில் குறித்த மஞ்சள் தொகை கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பகுதியை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-4)

## மாதாந்த கடை வாடகையை குறைக்க மருதனார்மடம் சந்தை வர்த்தகர்கள் கோரிக்கை

(குப்பிழான்)

மருதனார்மடம் சந்தை தொகுதி கொரோனா உப கொத்தணியாக அறிவிக்கப்பட்டு இருந்தமையினால் எமது வியாபார நிலையங்களுக்கு வாடிக்கையாளர் வருவதற்கு அச்சப்படுவதுடன் வியாபார நடவடிக்கைகள் பெரும் நட்டத்தை அடைந்துள்ளன.

இதனால் பணியாளர்கள் சிலரை இடைநிறுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். எனவே கடைகள் பூட்டப்பட்டிருந்த காலப் பகுதிக்குரிய வாடகையை முழுமையாக விலக்கியளிக்குமாறும், வியாபார நிலையங்கள் இயல்பு நிலைக்குத் திரும்பும் வரை சந்தை உட்புறக் கடைகளிடமிருந்து ஆயிரம் ரூபாவும் மற்றும் வெளிப்புறக் கடைகளிடமிருந்து இரண்டாயிரம் ரூபா மட்டும் செலுத்துவதற்கு ஆவன செய்யுமாறும் மருதனார்மடம் சந்தைத் தொகுதி வர்த்தகர்கள் வலி.தெற்குப் பிரதேச சபை நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுதொடர்பில் மருதனார்மடம் சந்தைத் தொகுதி வர்த்தகர்கள் வலி. தெற்குப் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்களின் கவனத்திற்கு எழுத்துமூலமான கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும் அனைத்துப் பிரதேச சபையின் உறுப்பினர்களும் இந்தக் கொரோனாப் பேரிடர் காலத்து நெருக்கடியில் இருந்து இயல்பு நிலைக்கு வருவதற்கு எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேவேளை வலி.தெற்குப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் நிலையில் இதன்போது குறித்த விடயம் தொடர்பில் ஆராயப்படும் என எதிர்பார்ப்பதாக மருதனார்மடம் சந்தைத் தொகுதி வர்த்தகர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-18)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 26 செவ் 9 சூரி 10 இல்<br>உயரம்: 5.8<br>தகைமை/தொழில்: A/L, லண்டன் வியாபாரம், பிரஜாவுரிமை<br>எதிர்பார்ப்பு: படித்த மணமகள்<br>தொ.இ: B/11467 | பிறப்பு: 1971இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: செவ் 5 சூரி 1 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்:. முகாமைத்துவ வெளிவாரிப் பட்டதாரி, Programme Assistent<br>எதிர்பார்ப்பு: அரச/அரச சார்பற்ற நிறுவன நிரந்தர வேலை.ஆசிரியர்.எழுதுநர் தேவையில்லை<br>தொ.இ: G/1858 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: சூரி 7 செவ் 12 இல்<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: NCT Civil தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த தனியார் / அரச உத்தியோகத்தர்<br>தொ.இ: B/11469 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 57 1/4 செவ் 7 சூரி 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: நூலக விஞ்ஞானம்<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகன்<br>தொ.இ: G/1870 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: செவ் 7 சூரி 9 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: பாமசிஸ்ட்<br>எதிர்பார்ப்பு: சட்டத்தரணி.வங்கிப் பட்டதாரி விரிவுரையாளர்/ அரச உத்தியோகம்.<br>தொ.இ: B/11470 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 6 செவ் 8 சூரி 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில் கற்பித்தல் தனியார் நிறுவனம்<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/1873 |
| பிறப்பு: 1985 RC<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 66 செவ் 7 சூரி 9 இல்<br>உயரம்: 5.5<br>தகைமை/தொழில்: A/L பிரான்ஸ் PR உண்டு<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/11471 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 52 செவ் 10 சூரி 12 இல்<br>உயரம்: 5.2<br>தகைமை/தொழில்: கணனி நிரந்தர வேலை.<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி ஆசிரியராகவும்இருக்கலாம்<br>தொ.இ: G/1896 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## ஊழியர்களின் போராட்டத்தால் களேபரமானது சபை அமர்வு



(நெளுக்குளம்)

பணியிலிருந்து நிறுத்தி தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து வவுனியா நகரசபை ஊழியர்கள் சிலர் முன்னெடுத்த போராட்டத்தால் நேற்று இடம்பெற்ற வவுனியா நகர சபை அமர்வு களேபரமானது.

வவுனியா நகரசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் கௌதமன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது பேசிய தவிசாளர் இவர்களது கோரிக்கைகள் ஒவ்வொரு நாளும் மாற்றப்படுகின்றன. சபைக்கு எதிராகவும் உறுப்பினர்களுக்கெதிராகவும் முறையற்ற துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து அனைவருக்கும் அவமானத்தை ஏற்படுத்துகின்றனர். இது நீதியற்ற ஒரு போராட்டம் என தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த சபை செயலாளர் இ.தயாபரன், சட்டத்திற்குட்பட்டே நாம் அவர்களை பணியிலிருந்து நீக்கியுள்ளோம்.

இது தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். சட்டத்திற்கு புறம்பாக இங்கு எதுவுமே இடம்பெறவில்லை. நாம் வழங்கிய பல சந்தர்ப்பங்களை அவர்களாகவே தட்டிக்கழித்தனர்.

தற்போது அவர்களுக்கான விசாரணை இடம்பெறும்.அவர்கள் மீது 7 குற்றச்சாட்டுக்கள் எங்களால் முன்வைக்கப்பட்டுள்ளன என தெரிவித்தார். குறித்த விடயம் தொடர்பாக சபையில் நீண்ட விவாதம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-299)

# சர்வதேச நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள்

## இலங்கையில் மட்டும் அக்கறை காட்டாது சர்வதேசத்தையும் கவனிக்க வேண்டும்



(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் ஏதும் இடம் பெறவில்லை. இராணுவத்தினர் யுத்த கோட்பாடுகளுக்கு அமையவே யுத்தத்தில் ஈடுபட்டார்கள்.

ஆகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கை விவகாரத்தில் அக்கறை கொள்ளாமல் சர்வதேச நாடுகளில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து அக்கறை கொள்வது தற்போதைய சூழ்நிலைக்கு பொருத்தமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முந்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

30 வருட கால யுத்தம் அனைத்து இன மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியது.யுத்தம் முடிவுக்கு கொண்டு வந்ததன் பிறகே தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட்டது.

யுத்தம் முடிவடைந்த பிறகு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி பணிகள் தொடர்பில் சர்வதேச அரங்கில் பேசப்படவில்லை. அரசியல் நோக்கங்களை கொண்டு முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்குள் அதிகளவில் பேசப்பட்டன.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம் பெறவில்லை என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும். உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட யுத்த கோட்பாடுகளுக்கு அமையவே யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.காணாமலாக்கப்பட்டோரது உறவினர்கள் ஒரு தரப்பினரது கோரிக்கைக்கு அமைய போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கை குறித்து அவதானம் செலுத்துவதை விடுத்து சர்வதேச நாடுகளில் இடம் பெறும் மனித உரிமை குற்றங்கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். அரசாங்கம் அனைத்து இன மக்களின் உரிமைகளையும் பாதுகாத்து ஒன்றிணைத்து செயற்படுகிறது என திஸாநாயக்க தெரிவித்தார். (நி-4)

# மக்கள் அச்சமின்றி வாழவே பாதுகாப்பு அமைச்சு



(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் தரகர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் அச்சமும் சந்தேகமும் இன்றி வாழ்வதற்கான சூழலை உருவாக்கும் நோக்குடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த அமைச்சை நிறுவியுள்ளதாகவும் பாதாள குழுக்களின் நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் இடமளிப்பதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர், நாட்டின் அபிவிருத்திக்கு துணைநிற்கும் இளைஞர் சமுதாயம் போதைப்பொருளுக்கு அடிமையானால் நாட்டின் அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது.

அதிகமான போதைப்பொருள் கடத்தல் கடல் வழியாகவே இடம்பெறுகிறது.

இது போன்ற கடல் வழி மூலமான கடத்தல்களை அடையாளம் காண இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலை மட்டத்தில் குழுக்களை அமைத்து போதைப் பொருளில் இருந்து மாணவர்களை பாதுகாக்க நடவடிக்கைகளை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் சுமார் 31 ஆயிரம் கைதிகள் சிறைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர்களில் சுமார் 11 ஆயிரம் பேர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்றும் சுட்டிக்காட்டிய அமைச்சர், அவர்கள் மீண்டும் மீண்டும் சிறைக்கு செல்வதாகவும் சுட்டிக்காட்டினார்.

போதைப் பொருள் தொடர்பாக 1997 என்ற விசேட தொலைபேசி இலக்கத்தினூடாகவும் கப்பம் பெறுவது தொடர்பாக 118 என்ற விசேட தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்பு கொண்டு பொது மக்களால் தகவல்களை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.(நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அபூர்வ சகோதரர்கள்

ஒரு ஊரிலே இரு சகோதரர்கள். அதாவது அண்ணனும் தம்பியும்.அந்த இரண்டுபேரிலே அண்ணனுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. தம்பிக்கு கல்யாணம் ஆகவில்லை.வேண்டாம் என்று இருந்துவிட்டான். அவர்கள் இரண்டு பேருக்குமே சொந்தமாக கொஞ்சம் நிலம் இருந்தது. நன்றாக விளையக்கூடிய நிலம்.

அப்பா விட்டுடுப்போன சொத்து. தனித்தனியாக விவசாயம் செய்து கொண்டிருக்கின்றார்கள். அண்ணன் காரன் கல்யாணம் ஆனவன். அவன் என்ன நினைப்பான் என்றால்..

எனக்கு மனைவி மக்கள் இருக்கின்றார்கள்..அதனால் கடைசி காலத்திலே எங்களைக் காப்பாற்றுவதற்கு பிள்ளைகள் இருக்கின்றார்கள். அதாவது முதுமையிலே நமக்குப் பாதுகாப்பு உண்டு. ஆனால் என் தம்பிக்கு யாருமே இல்லை. அவன் தனி ஆள். வயதான அவனைக் கவனிக்கிறதற்கு யாருமே இல்லை.

அதனால் அவன் தான் அதிகமாக பணம் சேர்க்க வேண்டும். அதற்கு நாம் தான் எப்படியாவது உதவி செய்ய வேண்டும்.

அப்படி என்று அண்ணன்காரன் நினைப்பான். அதற்காக என்ன செய்யலாம் என்று யோசிப்பான். ஒரு நாள் இராத்திரி ஒரு சாக்கு நிறைய நெல்லைப் போட்டு கட்டி எடுத்துக் கொண்டு போனான். தம்பி வீட்டுக்குப் பின் பக்கம் இருந்த களஞ்சியத்திலே நெல்லைக் கொட்டிவிட்டு பேசாமல் திரும்பி வந்துவிட்டான்.

தம்பியிடம் நேரடியாக கொடுத்தால் வாங்கிக் கொள்ள மாட்டான். அதனால் இப்படி இரகசியமாக போய் அவனுக்குத் தெரியாமல் அவன் வீட்டுக் களஞ்சியத்திலே தானியத்தைக் கொட்டிவிட்டுத் திரும்பி வந்து விட்டான்.

இதே மாதிரி அடிக்கடி செய்து கொண்டிருந்தான். இதே நேரத்தில் தம்பிக்காரன் என்ன யோசனை செய்தான் தெரியுமா?

நான் ஒருத்தன் தான். ஆனால் அண்ணன் குடும்பம் பெரிது. அதனால் எனக்கு அதிகமாக எதுவும் தேவையில்லை. அண்ணனுக்குத் தான் தேவை அதிகம்.அவருக்கு தான் நாம் ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தான்.

நேரிலே கொடுத்தால் அவர் எதுவும் வாங்கிக் கொள்ள மாட்டார் என்று தெரியும். அதனால் இவனும் இராத்திரியோடு இராத்திரியாக ஒரு சாக்கு நிறைய தானியத்தைத் கட்டி எடுத்துக் கொண்டு போனான்.

அண்ணனுடைய களஞ்சியத்திலே கொட்டிவிட்டு கம் என்று திரும்பி வந்துவிட்டான். இதே மாதிரி இவனும் அடிக்கடி செய்து கொண்டிருந்தான்.

அதாவது அண்ணன் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்து தம்பிக்காரன் கொண்டு வந்து தானியத்தைக் கொட்டுகின்றான். தம்பி நன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்து அண்ணன்காரன் கொண்டு வந்து தானியத்தைக் கொட்டுகின்றான்.

இது ஒருத்தருக்கு ஒருத்தர் தெரியாமல் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

ஒரு நாள் என்ன ஆகியது தெரியுமா? நடு இராத்திரி அண்ணன்காரன் எழுந்துகொண்டான். வழக்கம் போல் நெல் மூட்டையைத் தூக்கிக் கொண்டு தம்பி வீட்டுக்குப் போகிறான்.

அதே நேரம் தம்பியும் எழுந்து கொண்டான்.நெல்மூட்டையைத் தூக்கிக் கொண்டு அண்ணன் வீட்டுக்குப் போகின்றான். இரண்டு தெருவும் சந்திக்கின்ற ஒரு இடத்திலே இரண்டுபேரும் மோதிக் கொண்டார்கள்.அடடே தம்பி நீயா என்றான்.

ஆமாம் அண்ணே நீங்களா.. என்றான் அவன். நிறையகாலமாக இரகசியமாக நடந்து கொண்டிருந்தது என்ன என்ற விடயம் அப்பொழுது தான் அந்த இடத்திலே இரண்டு பேருக்குமே புரிந்தது.

இது நடந்து நிறைய நாள் கழித்து அந்த ஊரிலே கோயில் கட்டுவதற்கு ஒரு இடம் தேடினார்களாம். ஒரு புனிதமான இடம் தேவை. எங்கள் ஊரிலே அப்படிப்பட்ட இடம் எது என்று எல்லோரும் யோசனை செய்தார்களாம். எல்லோரும் ஒரு மனதாக முடிவு செய்த இடம் எது தெரியுமா?

அந்த அண்ணனும் தம்பியும் நடு இரவிலே சந்தித்து கொண்ட அந்த இடம் தான் புனிதமான இடம் என்று முடிவு செய்தார்கள். அந்த இடத்திலேயே கோயிலையும் கட்டினார்களாம்.கடவுளை வணங்குகிறவர். வணங்காதவர் என்கின்ற அடிப்படையில் சமயத்தைக் கண்டறிவதில்லை.அன்பு செலுத்துபவர்,செலுத்தாதவர் என்ற இரு வகையினரினால் சமயம் கண்டறியப்படுகிறது என்பது பெரியவர்கள் கருத்து.இந்தக் காலத்திலேயெல்லாம் சகோதர பாசம் இப்படியா இருக்கு. ஒருத்தன் சொன்னான்.எங்கள் வீட்டிலே பங்கு பிரித்த பொழுது எனக்கு எதுவுமே வேண்டாம். எல்லாவற்றையும் எங்கள் அண்ணனிடம் கொடுத்து விடுங்க என்று சொல்லிவிட்டேன்.. என்றான் மிகவும் பெருந்தன்மையாக. பரவாயில்லையே உங்கள் அப்பா விட்டுவிட்டுப் போனது எவ்வளவு இருக்கும்? என்றேன்.

அது என்ன சுமாராக ஒரு ஐம்பதினாயிரம் (50000) இருக்கும். என்றான். என்ன சொத்தா? என்று கேட்டேன். இல்லைங்க கடன் என்றான் அவன்.

# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021

09

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**இதுவரை 5 அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்கள் அதிக மக்கள் வாக்குகள் கிடைத்தும் தேர்வு செய்வோர் அவையில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற முடியாமல் தோல்வியுற்றனர்.**

### பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் முறைகள் (Voting Methods) எவை?

அமெரிக்காவில் வாக்களிக்கும் முறையிலும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபாடுகள் உள்ளன. மாநில அரசுகள் அதன் சட்ட அதிகார வரம்புகளுக்கு அமைய வெவ்வேறு வாக்களிப்பு முறைகளைப் பயன்படுத்துகின்றன. அதிகரித்து வரும் வாக்காளர்கள் காரணமாக மாநில அரசுகள் தபால் மூலமான வாக்களிப்பு முறையையும் மற்றும் உத்தியோகபூர்வ தேர்தல் நாளுக்கு முன்னரே ஒரு குறிப்பிட்ட நாட்களில் வாக்களிக்கக்கூடிய வசதியையும் ஏற்படுத்தியுள்ளன.

அமெரிக்க மாநிலங்களில் உள்ள வாக்களிக்கும் முறைகளைப் பார்ப்போமானால் அவை (1) வாக்களிப்பு நிலையத்தில் வாக்களித்தல் (Polling place Voting). (2) அணுகக்கூடிய வாக்களிப்பு (Accessible voting). (3) நேரகால வாக்களிப்பு (Early voting). (4) வராதோர் வாக்கு (absentee ballot)" போன்றவையாகும்.

**அமெரிக்காவில் வாக்களிக்கும் முறையிலும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபாடுகள் உள்ளன. மாநில அரசுகள் அதன் சட்ட அதிகார வரம்புகளுக்கு அமைய வெவ்வேறு வாக்களிப்பு முறைகளைப் பயன்படுத்துகின்றன. அமெரிக்க மாநிலங்களில் உள்ள வாக்களிக்கும் முறைகளைப் பார்ப்போமானால் அவை (1) வாக்களிப்பு நிலையத்தில் வாக்களித்தல் (2) அணுகக்கூடிய வாக்களிப்பு, (3) நேரகால வாக்களிப்பு, (4) வராதோர் வாக்கு போன்றவையாகும்.**

வாக்களிப்பு நிலையத்தில் வாக்களித்தல் முறை (Polling place Voting) என்பது இலங்கை முறையை ஒத்தது. அதாவது உத்தியோகபூர்வ தேர்தல் நாள் அன்று வாக்களித்தலாகும்.

அணுகக்கூடிய வாக்களிப்பு முறை - தேர்தலின் போது பலவிதமான கல்வியறிவு கொண்டவர்கள், செவிப்புலன்/ கட்புலன் வரம்புகள் உள்ளவர்கள், அறிவாற்றல் பிரச்சினைகள் அல்லது அறிவுசார் குறைபாடுகள் உள்ளவர்கள் போன்ற பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு வகையான மக்களுக்கு வாக்களிப்பதற்கு வசதி செய்து கொடுப்பதே அணுகக்கூடிய வாக்களிப்பு முறை (Accessible voting) ஆகும்.

நேரகால வாக்களிப்பு முறை- உத்தியோகபூர்வ தேர்தல் தினத்திற்கு ஒருநாள் அல்லது சில வாரங்களுக்கு முன் (கால எல்லை மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும்) வாக்காளர்கள் நேரில் சென்று வாக்களிப்பதற்கு ஒரு வாக்களிப்பு இடம் (பொதுவாக மாவட்ட தேர்தல் அதிகாரிகள் அலுவலகம் அல்லது வேறு ஒரு இடம்) அமைக்கப்பட்டிருக்கும்.

**அதிக மக்கள் வாக்குகள் கிடைத்தும் தேர்வு செய்வோர் அவையில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற முடியாமல் தோல்வியுற்ற அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்கள்**



ஆண்ட்ரூ ஜாக்சன் 1824



சாமுவேல் டில்டென் 1876



க்ரோவர் க்ளீவ்லாண்ட் 1888



அல் கோர் 2000



ஹிலாரி கிளின்டன் 2016


அங்கு வாக்காளர்கள் சென்று வாக்களிக்கும் முறை நேரகால வாக்களிப்பு முறையாகும். கனெக்டிகட், டெலவேர், கென் டகி, மிசிசிப்பி, மிசௌரி, நியூஹாம் ஷயர் மற்றும் தென்கரோலினா ஆகிய ஆறு மாநிலங்களில் நேரகால வாக்களிப்பு முறை இன்னும் நடைமுறைப்படுத்தப்படவிலலை.

வராதோர் வாக்கு (absentee ballot) என்பது தபால் மூலம் வாக்களித்தல் அல்லது குறிப்பிட்ட இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டிகளில் வாக்குகளை இடல் ஆகும்.

ஒரிகன், கொலராடோ, ஹவாய், உட்டா மற்றும் வோஷிங்டன் மாநிலங்களில் உத்தியோகபூர்வ தேர்தல் நாள் அன்று வாக்களிப்பு நிலையத்தில் வாக்களித்தல் முறை இல்லாத காரணத்தால் வராதோர் வாக்கு முறையிலேயே பொதுவாக வாக்களிப்பு நடைபெறுகிறது.

உடல் நலம் இல்லாதவர்கள், வர இயலாத வகையில் முடங்கியவர்கள், பயணத்தில் இருப்பவர்கள் அல்லது மாநிலத்துக்கு வெளியே கல்வி கற்பவர்களுக்காக, தபால் முறை வாக்குகள் உதவியாக இருக்கும். நிகழ்நிலை (Online) வாக்களிப்பு முறை எதுவும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கிடையாது.

மேற்கூறிய முறைகளைப் பார்க்கும் போது வாக்காளர் ஒருவர் தனது விருப்பத்திற்கேற்ப (1) தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையத்திற்கு சென்று வாக்களிக்க முடியும் அல்லது (2) தேர்தல் தினத்திற்கு முன்னர் குறிப்பிட்ட இடத்தில் தனது (நேரகால) வாக்களிப்பைச் செய்யலாம் அல்லது (3) தனது வாக்கினைத் தபால் மூலம் செலுத்தலாம் அல்லது (4) தனது வாக்கினை குறிப்பிட்ட இடத்தில் உள்ள வாக்குப் பெட்டியில் (Drop-off Point) போடுவதன் மூலம் செலுத்தலாம். இவ்வாறு நான்கு முறைகள் உள்ளன. இதில் ஏதாவது ஒரு முறையில் தன் வாக்களிப்பைச் செய்யலாம். இதைவிட தற்காலிக வாக்கு (Provisional ballot) என்றும் ஒன்று உள்ளது.




குறிப்பிட்ட இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டிகளில் வாக்குகளை இடல்

### தற்காலிக வாக்கு (Provisional ballot) எப்போது பயன்படுத்தப்படுகிறது?

வாக்காளரின் பெயர் வாக்கெடுப்புப் புத்தகத்தில் இல்லாத போது அவர் தான் வாக்களிப்பதற்கு தகுதியுடையவர் என்று நம்பினால் அவர் தற்காலிக வாக்குச்சீட்டைப் போடலாம். வாக்காளர் தனது ஆள் அடையாளத்தை நிரூபிக்கத் தவறும் பட்சத்தில் அல்லது வாக்காளரின் பெயர் கொடுக்கப்பட்ட பகுதிக்கான வாக்கெடுப்புப்பட்டியலில் இல்லாத போது, அல்லது வாக்காளரின் பதிவில் தவறான முகவரி அல்லது எழுத்துப்பிழை போன்ற தவறான அல்லது காலாவதியான தகவல்கள் உள்ள போது பெயர், அல்லது வாக்காளர் பெயரில் ஏற்கனவே ஒரு வாக்கு பதிவு செய்யப்பட்டுள்ள போது ஒரு தற்காலிக வாக்குப்பதிவு (Provisional ballot) இடம்பெறுகின்றது.

**வாக்காளரின் பெயர் வாக்கெடுப்புப் புத்தகத்தில் இல்லாத போது அவர்தான் வாக்களிப்பதற்கு தகுதியுடையவர் என்று நம்பினால் அவர் தற்காலிக வாக்குச்சீட்டைப் போடலாம். இவ் வாக்கும் எண்ணப்படுகின்றன. சில மாநிலங்களில் இம்முறையில்லை.**

(தொடரும்...)

# மனித உரிமை மீறலுக்கான மற்றொரு ஆதாரமே

# கட்டாய தகனம்-மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**கட்டாய தகனம் குறித்த விடயத்தில் அரசாங்கம் அக்கறை கொள்ளாதது மற்றுமொரு ஆதாரம் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**

அண்மையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வெளியிட்ட அறிவிப்பானது, முஸ்லிம்களின் மத உரிமைகளை கொடூரமாக மறுத்த கொள்கையின் முடிவாக அமைந்தது என தெற்காசியாவிற்கான பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உறுதிமொழி வழங்கப்பட்ட போதிலும் அரசாங்கம் முஸ்லிம்களை வலுக்கட்டாயமாக தகனம் செய்து வருகிறது என்றும் நிபுணர் குழுவின் பரிந்துரையைத் தொடர்ந்தே முடிவை அறிவிக்க முடியும் எனக் கூறி தற்போது பின்வாங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் உலக சுகாதார அமைப்பு, கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்ய அனுமதித்துள்ளபோதும் இலங்கை அரசாங்கத்தின் குறித்த முடிவுக்கு ஐ.நா. மனித உரிமை வல்லுநர்களும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பும் கண்டித்துள்ளன.



பாகிஸ்தான் பிரதமர் 22 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். ஜெனிவா அமர்வு இடம்பெறவுள்ள நிலையில் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பினரான பாகிஸ்தானின் ஆதரவைப் பெற இலங்கை ஆர்வமாக உள்ளது என மீனாக்ஷி கங்குலி சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் அதிகரித்துவரும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் புதிய தீர்மானத்தை பேரவை பரிசீலிக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், கட்டாய தகனம் குறித்த விடயத்தில் அரசாங்கம் அக்கறை கொள்ளாதது அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்கான மற்றுமொரு ஆதாரம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

## சீன ஆக்கிரமிப்பின் உச்சம் தமிழ்-சிங்கள மொழிகள் 'அவுட்'




(கொழும்பு)

கொழும்பு போர்ட்சிட்டி பகுதியில் சீன நிறுவனமொன்றின் நுழைவாயில் தனி சீன மொழியில் மாத்திரம் இருக்கும் புகைப்படம் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வரவேற்பு நுழைவாயில் பெயர்ப்பலகையில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. சீன மொழிக்கு முதலிடமும், ஆங்கில மொழிக்கு இரண்டாம் இடமும் வழங்கப்பட்டிருப்பது இலங்கையர்களை ஆச்சரியத்திற்கு உட்படுத்தியுள்ளது. (நி-8)

## மோட்டார் சைக்கிள் திருடர்கள்-ஜாக்கிரதை

(கொழும்பு)

ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல் பல்வேறு பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களைத் திருடி வருவதாக எச்சரித்துள்ள பொலிஸார் இதுபோன்ற ஆறு சம்பவங்கள் கடந்த 24 மணிநேரத்திற்குள் பதிவாகியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கட்டான, சீனக் குடா, சுன்னாகம், புத்தளம், பொல்பித்திகமை மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளிலேயே நேற்று முன்தினம் மட்டும் ஆறு மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக பொதுமக்கள் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையையும் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள அவர், இதுபோன்ற குற்றங்களுக்கு இரையாக வேண்டாம் என்றும் அறிவுறுத்தியுள்ளார். (நி-4)

## இங்கிலாந்து விமானங்களுக்கான பயணத்தடை நீக்கம்

(கொழும்பு)

இங்கிலாந்தில் புதிய கொவிட் -19 மாறுபாட்டின் காரணமாக ஐக்கிய இராச்சியத்திலிருந்து இலங்கைக்கு வரும் பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த பயணத் தடையுத்தரவு நேற்று முன்தினம் இரவு நீக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், சுகாதார அதிகாரிகளால் நிர்ணயிக்கப்பட்ட 14 நாட்கள் தனிமைப்படுத்தல் மற்றும் பி.சி.ஆர். சோதனைகளுக்கு உட்பட்டு இங்கிலாந்தில் இருந்து பயணம் செய்வதற்கான கட்டுப்பாடுகளை தளர்த்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம் அறிமுகப்படுத்திய வழிகாட்டுதலின் கீழ் இங்கிலாந்திலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகையும் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 150 | 150 | 150 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 500 | 550 | 500 | 600 |
| தக்காளி | 230 | 260 | 250 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 50 |
| கோவா | 100 | 80 | 100 | 100 |
| கரட் | 160 | 220 | 180 | 120 |
| பூசணி | 100 | 100 | 120 | 120 |
| புடோல் | 160 | 180 | 160 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 160 | 250 | 160 | 250 |
| வெண்டிக்காய் | 240 | 260 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 110 | 150 |
| பயற்றங்காய் | 180 | 200 | 170 | 120 |
| லீக்ஸ் | 140 | 130 | 140 | 140 |
| பீற்றூட் | 250 | 240 | 200 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 400 | 350 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 150 | 120 | 130 | 150 |
| கத்தரிதம்புள்ள | 140 | 130 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 50 | 35 | 30-40 | 40 |
| தேசிக்காய் | 140 | 80 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 70-100 | 80-120 |
| இராசவள்ளி | 250 | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 140 | 140 | 200 |
| முள்ளங்கி | 60 | 100 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 150 | 30 | 30 |
| ஈரப்பலா | 130 | 100 | -- | 100 |

# பாக்.பிரதமரை பாராளுமன்றிற்கு அழைத்துவர வேண்டாம்

## சபாநாயகர் கோரிக்கை

(கொழும்பு)

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானை பாராளுமன்றத்திற்கு அழைத்து வர வேண்டாம் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன கோரியுள்ளார்.

தற்போதைய கொரோனா நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த கோரிக்கையை முன்வைப்பதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன வெளிவிவகார அமைச்சிடம் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமரை பாராளுமன்றத்திற்கு அழைப்பதாக இருந்தால், பாராளுமன்ற ஊழியர்கள் அனைவரையும் அழைக்க வேண்டி ஏற்படுவதாகவும் தற்போதைய சூழ்நிலையில் அது பொருத்தம் இல்லையெனவும் தெரிவித்தார்.

பாகிஸ்தான் பிரதமர் எதிர்வரும் 22 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதுடன், அவர் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் கொரோனா நிலைமையைக் கருத்திற்கொண்டு இம்ரான் கானின் பாராளுமன்ற உரை இரத்து செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# வடகிழக்கில் நிரந்தர அமைதிச் சூழலை ஏற்படுத்த இந்தியாவின் பங்களிப்பு அவசியம்-சந்திரகுமார்

(கிளிநொச்சி)

**வடக்குக் கிழக்கில் நிரந்தர அமைதிச் சூழலை ஏற்படுத்துவதற்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியமாகும் என சமத்துவக் கட்சி பொதுச் செயலாளர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தம் முடிந்தாலும் நாட்டில் அமைதியும் இயல்பு நிலையும் உருவாகவே இல்லை. அமைதியின்மையும் நிச்சயமற்ற நிலையும் பதற்றமான சூழலுமே நீடிக்கிறது. சமூக முரண்பாடுகள், இன முரண்பாடுகள் என அரசியல் முரண்பாடுகள் வலுத்துக் கொண்டே செல்கின்றன.

உள் - வெளி அழுத்தங்களால் நாடு தொடர்ந்தும் நெருக்கடிக்குள்ளாகிக் கொண்டிருக்கிறது.

மக்கள் எதிர்பார்த்த நிம்மதி ஏற்படவில்லை. இதெல்லாம் போதாதென்று வடக்குக் கிழக்கில் வாழும் மக்கள் மேலும் ஒரு புதிய நெருக்கடி நிலையை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வடக்கில் தீவகப் பகுதிகளில் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ள மின் உற்பத்தித்திட்டமானது பிராந்திய ரீதியான நெருக்கடி நிலையை உருவாக்கியுள்ளதோடு அங்குள்ள மக்களையும் குழப்பத்திற்குள்ளாக்கியுள்ளது.

இந்தப் பிராந்திய நெருக்கடியானது, எதிர்காலத்தில் இந்தப் பகுதியிலுள்ள கடல் மற்றும் சுற்றாடல் பரப்பில் தொடர் நெருக்கடிகளை ஏற்படுத்துவதாகவே அமையும்.

பூகோள ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் இந்தியாவுடன் கொண்டிருக்கும் நட்பையும் உறவையும் இது பாதிக்கும்.

எனவே இதில் அரசாங்கம் நிதானமான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். அத்துடன், வடக்குக் கிழக்கில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கும் இங்குள்ள மக்களின் முன்னேற்றத்துக்கும் இந்தியாவின் பங்களிப்புகள் அவசியமானவை. வரலாற்று ரீதியாக எமது மக்கள் இந்தியாவுடன் கொண்டிருக்கும் பண்பாட்டுறவை வலுப்படுத்துவதிலும் இந்தியாவின் பங்களிப்புகள் எப்போதும் தேவை என்று குறிப்பிடப்பிட்டுள்ளது. (நி-6-350)

## மஹோற்சவம்

(குப்பிழான்)


யாழ். வண்ணை கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய சார்வரி வருட மஹோற்சவம் நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 27 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது.

மஹோற்சவத்தில் கலந்து கொள்ளும் அடியவர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கலந்து கொள்ளுமாறு சிவஸ்ரீ தா.மாரீஸ்வரக் குருக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். (4-6-18)

# பதுங்குகுழிகள், மண்அணைகளை அகற்றுமாறு மாவட்ட செயலரிடம் மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)



இறுதிப் போர் நடைபெற்ற முல்லைத்தீவின் மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர் மடம் ஆகிய பகுதிகளில் உள்ள பதுங்கு குழிகள், மண் அணைகளை முழுமையாக அகற்றுமாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரிடம் அப்பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

2009 ஆம் ஆண்டில் தமது கிராமங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தஞ்சமடைந்திருந்ததாகவும் எறிகணை வீச்சுகளில் இருந்து தற்காத்துக் கொள்வதற்காக பொது மக்கள் அமைத்த பதுங்கு குழிகள் முழுமையாக இதுவரை அழிக்கப்படவில்லை எனவும் இப்பதுங்கு குழிகளில் காட்டு விலங்குகளும் பாம்புகளும் நுளம்பு பெருக்கமும் நிறைந்து மேலும் அழிக்கப்படாத மண் அணைகளினால் பல இடங்களில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதாகவும் மண் அணைகளை அகற்றுவதன் மூலம் மழை வெள்ளம் வடிந்தோடக் கூடிய நிலைமை உள்ளதாகவும் மீள் குடியேற்றத் தொடக்கத்தில் பதுங்கு குழிகள் அழிப்பு, மண் அணைகள் அகற்றல் என்பன இடம்பெற்றதாகவும் அவை முழுமை பெறவில்லை எனத் தெரிவிக்கும் இப்பகுதிகளின் மக்கள் பதுங்கு குழிகளையும் மண் அணைகளையும் அகற்றித் தருமாறு மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-350)

# அறுவடைகள் தாமதிக்க புழுதி விதைப்பிற்கான சூழல் இன்மையே காரணம்

(அக்கராயன்)

வவுனிக்குளத்தின் கீழான வயல் நிலப் பகுதிகளில் புழுதி விதைப்பிற்கான நிலத் தோற்றப்பாடுகள் இல்லாததன் காரணமாக சேற்று விதைப்பே கூடுதலாக இடம்பெறுகின்றது என வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகாஷ் தெரிவித்தார்.


முல்லைத்தீவு மாவட்டத்திலே காலபோக நெற்செய்கை இன்னும் நிறைவு செய்வதற்கு வவுனிக்குளத்தின் கீழ் ஒன்றரை மாதம் வரையான காலப்பகுதி ஏன் தேவைப்படுகின்றது என வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஏனைய குளங்களின் கீழ் புழுதி விதைப்புகள் இடம்பெற்று மூன்றரை மாத காலங்களில் அறுவடைகள் முடிந்து விடும்.

ஆனால் வவுனிக்குளத்தின் கீழ் இன்னும் ஒன்றரை மாதங்கள் நீர் விநியோகம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கு பிரதான காரணம் வவுனிக்குளத்தின் கீழான வயல் நிலங்களில் புழுதி விதைப்பிற்கான சூழல் இல்லை. மழை பொழிந்த பின்னர் தான் விதைப்புகள் இடம் பெறும்.

ஏனைய இடங்களில் அறுவடைகள் நிறைவடைந்தாலும் வவுனிக்குளத்திற்கு ஒன்றரை மாதங்கள் வரையான காலப்பகுதிக்கு நீர் விநியோகம் மேற்கொள்ள வேண்டிய நிலைமை உள்ளதாக தெரிவித்தார்.(4,6,350)

# 25 கிலோ சி4 வெடிமருந்து மீட்பு



(நெளுக்குளம்)

வவுனியா நெடுங்கேணி பகுதியில் 25 கிலோ சி4 வெடி மருந்து நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஒன்றிணைந்து நடத்திய சோதனை நடவடிக்கையின் போதே இந்த வெடிப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

குறித்த சம்பவத்தில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியை சேர்ந்த 32வயதான சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் கண்ணி வெடி அகற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனமொன்றில் கடமையாற்றியவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் மற்றும் நெடுங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-299)





கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் இலவசக் கணனி பயிற்சி நிலையம் நேற்று முன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. லண்டன் ரட்ணம் பவுண்டேசன் அமைப்பின் நிதி அனுசரணையில் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையால் கிளிநொச்சி கரடிப்போக்கு விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் இந் நிலையம் திறந்து வைக்கப்பட்டது. (படங்கள்:-கிருஷ்ணகுமார்)

வாழ்வின் முன்னேற வழிகள் நவநாகரீகச் செயல் உபச்சாரம், ஆர்வம் உடைமை, தன்னம்பிக்கை, கொள்கை மாறாமல் நிலையாய் இருத்தல்

– வால்ட் டிஸ்னி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பால்மா இறக்குமதி நிறுத்தம்; எங்களிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

நான்கு ஆண்டுகளில் பால்மா இறக்குமதி நிறுத்தப்படுமென விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே கூறியுள்ளார்.

நான்கு ஆண்டுகளில் பால்மா இறக்குமதியை நிறுத்துவதற்காக ஐந்து இலட்சம் கறவைப் பசுக்களை அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளில் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சர் கூறியுள்ளார்.

உள்நாட்டில் பசும்பால் உற்பத்தியை அதிகரிப்பதனூடு பால்மா இறக்குமதியை நிறுத்துவதென்பது நல்லதொரு பொருளாதார அபிவிருத்தித் திட்டமாகும்.

இவ்வாறான திட்டத்தின் மூலம் கறவைப் பசுக்களை வளர்ப்பதில் பொதுமக்கள் ஆர்வம் கொள்வர் என்பது திண்ணம்.

ஆக, விவசாய அமைச்சரின் மேற்போந்த அறிவிப்பு பாராட்டுக்குரியது. எனினும் அது தொடர்பில் வடபகுதி மக்களாகிய நாம் மகிழ்வடையக் கூடியதாக நிலைமை இல்லை என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

உள்நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு அடுத்து வரும் இரண்டு வருடங்களில் ஐந்து இலட்சம் கறவைப் பசுக்களை மேலதிகமாக பசு வளர்ப்பில் சேர்ப்பது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதாவது தற்போது இருக்கக்கூடிய கறவைப் பசுக்களோடு இன்னும் ஐந்து இலட்சம் கறவைப் பசுக்கள் சேர்க்கப்படவுள்ளன.

அரசாங்கத்தின் மேற்போந்த அறிவித்தலைப் பார்க்கும்போதுதான், வட மாகாணத்தில் பசு வளர்ப்பு, மாட்டுப் பண்ணை என்பன எந்த நிலையில் உள்ளன என்பதை ஒரு கணம் நாம் சிந்திக்க வேண்டும்.

இந்த சிந்தனையின் கீழ் வட மாகாணத்தில் மாட்டுப் பண்ணை உள்ளிட்ட கால்நடை உற்பத்தி என்பது மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதை அவதானிக்க முடியும்.

இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தால் இங்கு பசு வளர்ப்புத் திட்டம் எந்தவகையிலும் ஊக்குவிக்கப்படவில்லை.

வட மாகாணத்திலுள்ள பெரும்பாலான கால்நடை வைத்தியசாலைகளின் இயங்கு நிலைகள் வேதனைக்குரியவையாகவே இருக்கின்றன.

பொறுப்புவாய்ந்த கால்நடை வைத்தியர்கள் சிலரும் கால்நடை உற்பத்தி சார்ந்த உத்தியோகத்தர்கள் சிலரும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனராயினும் கால்நடை வைத்தியசாலைகளை மந்த நிலைக்கு ஆளாக்குகின்றவர்களால்,

அர்ப்பணிப்போடு செயலாற்றுகின்றவர்கள் தங்களின் சேவைகளை வழங்குவதில் கடும் விமர்சனங்களையும் சவால்களையும் எதிர்கொள்கின்றனர்.

தவிர கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் தனியார் கால்நடை வைத்தியசாலைகளே தஞ்சமென்று இருக்கின்றபோது வட மாகாணத்தில் கால்நடை வளர்ப்பில் புதிய திட்டங்கள் எதுவும் சாத்தியப்படவோ, சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்படவோ மாட்டாதென்பது தான் உண்மை.

ஆக, ஐந்து இலட்சம் கறவைப் பசுக்களில் ஐந்து பசுவையேனும் நம் வடபகுதிக்கு கொண்டு வருவோமாயின் அதுகூட அதிசயமான சம்பவமாகவே அமையும்.

# பல்கலைக்கு இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 500 இனால் அதிகரிக்கப்படவுள்ளது.

இதற்காக பல்கலைக்கழக கட்டமைப்பில் புதிதாக 500 விரிவுரையாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், "பல்கலைக்கழகங்களுக்கு இவ்வருடம்இணைத்துக் கொள்ளப்படவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 579 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 40 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படவுள்ளார்கள். இதற்காக உபவேந்தர்கள் மற்றும் திறைசேரியின் பங்களிப்புக் கிடைத்துள்ளது".

பல்கலைக்கழக மாணவர்களுக்கு அடுத்த மாதத்திற்கு முன்னதாக கொரோனாத் தடுப்பூசியை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக முதற்கட்டத்தின் கீழ் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ள மருத்துவபீட மாணவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## 6 ஆயிரம் வாள்கள் இறக்குமதி தொடர்பான மனு விசாரணைக்கு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற காலப்பகுதியில் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்படும் 6 ஆயிரம் வாள்கள் தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்படவேண்டும் எனக் கோரி, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தாக்கல் செய்துள்ள ரிட் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த மனுவை மார்ச் மாதம் 5ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதன்போது, இந்த விடயம் தொடர்பாக இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகள் தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என, பொலிஸ்மா அதிபர் சி.டி விக்ரமரத்ன உள்ளிட்ட குறித்த மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள பாதுகாப்பு பிரிவின் பிரதானிகளுக்கு நீதிமன்றம் அறிவித்தல் விடுத்துள்ளது. (நி-4)

## பௌத்த பிக்குகள் என்ற அடிப்படையில் பா.ஜ.கவை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம்

(கொழும்பு)

அரசியல் நோக்கங்களுடன் இலங்கையில் பாரதிய ஜனதா கட்சியின் கிளையை ஸ்தாபிக்க முயற்சிக்கப்படுமாயின் அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனச் சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்தார்.

பாரதிய ஜனதா கட்சியின் அறிவிப்பு தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில், இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதா கட்சி அரசியல் நோக்கங்களுடன் இலங்கையில் அதன் கிளையொன்றை ஸ்தாபிக்க முடியாது. அதற்கு நாம் முழுமையான எதிர்ப்பை வெளியிடும் அதேவேளை, அத்தகைய செயற்பாடு இடம்பெறும் பட்சத்தில் நாட்டின் சுயாதீனத்தன்மையும் இறையாண்மையும் வெகுவாகப் பாதிப்படையும். எனவே இந்நாட்டின் பௌத்த பிக்குகள் என்ற அடிப்படையில் அதனை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### எதிர்மறைக்கு ஆதாரம் தேவை

எதிர்மறை என்னும் கொடி படர ஒரு ஆதாரம் தேவை. ஒரே ஒருவர் மீது நீங்கள் காட்டுகிற எதிர்மறை உணர்வு அல்லது வெறுப்பே கூட உங்களை மீளா நரகத்துக்கு அழைத்துச் செல்லப் போதுமானது- வேறெதுவுமே வேண்டாம்.

நீங்கள் ஆன்மாவை நோக்கி நகர்ந்து பேரண்ட அறிவுத் திறனைக் காணும் வகையில், பார்வையை விரிவாக்கிக் கொள்வதற்காகத்தான் எல்லா எதிர்மறைகளும் உள்ளன. அவை சுட்டிக்காட்டுபவையாக இருக்கின்றன. எதிர்மறை உணர்வுக்கு ஆதாரம் தேடுவதில் கவனத்தைச் செலுத்துவதற்குப் பதிலாக எதிர்மறை உணர்வின் விதையைத் தேடுங்கள்.

தியானம், மௌனம், கிரியா ஆகியவற்றில் எதிர்மறை உணர்வின் தோற்றம் வேரிலேயே கிள்ளியெறியப்படுகிறது. (முற்றும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

கடன்பட்டு ஆடம்பரமாகச் செலவழிக்கக் கூடாது. கடன்படுவது மிகவும் துன்பத்தைத் தரும். கூடுமானவரை சிக்கனமாகவும் எளிமையாகவும் வாழ்ந்து வருதல் வேண்டும். கடன்பட்டு பாலன்னம் உண்பதைப் பார்க்கிலும் கடன்படாமல் உப்பில்லாக் கஞ்சியுண்பது நல்லது. (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** சீரணி சந்தி, ஆலங்குழாய், சண்டிலிப்பாய், நயினாதீவு தபாலகவீதி, நயினாதீவு முருகன் கோவில் வீதி, நயினாதீவு பிரதான வீதி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** திருநகர், ஜெயந்திநகர் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### தேங்காய் தீபம் ஏற்றி வழிபடுவதால் ஏற்படும் நன்மைகள்

பெரும்பாலும் ஆன்மிக வழிபாடுகளில் பெரிதாக தேங்காய் தீபம் இடம் பெறுவது இல்லை. ஏனெனில் தேங்காய் தீபத்தை எல்லா தெய்வங்களுக்கும் ஏற்ற மாட்டார்கள்.

ஒரு சில பிரச்சினைகளை போக்கவே தேங்காய் தீபம் ஏற்றப்படுகின்றது. இருப்பினும் இத்தீபம் ஏற்றுவதனால் பல நன்மைகள் உண்டு. அந்த வகையில் தேங்காய் தீபம் ஏற்றுவதனால் கிடைக்கும் நன்மைகள் என்னென்ன என்பதை பற்றி பார்ப்போம்.

பண ரீதியான வில்லங்கமான விடயங்களில் மாட்டிக் கொண்டு தவிப்பவர்கள் வீட்டின் பூஜை அறையில் சுக்கிர ஹோரையில் திங்கட்கிழமையில் தேங்காய் தீபத்தை ஏற்றி வழிபடுவார்கள்.


வேலை இல்லாதவர்கள் வேலை கிடைக்கவும், குழந்தை இல்லாதவர்கள் குழந்தை பாக்கியம் பெறவும், அம்மன் போன்ற பெண் தெய்வங்களுக்கு இரண்டு தேங்காய்களை உடைத்து தீபம் ஏற்றி வழிபடுவார்கள்.

தேங்காய் தீபம் ஏற்றும் பொழுது தேங்காய் உள்ளே நெய் ஊற்ற வேண்டும். தேங்காய் தீபத்தில் நெய் தவிர வேறு எந்த எண்ணெய்களையும் பயன்படுத்துவது கிடையாது.

திருமண தடை நீங்கும், தொழில் வளம் சிறக்கும், நல்ல வரன் அமையும், வேண்டுதல்கள் விரைவாகவும் பலிக்கும்.

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2021-13.03.2021



**தனுசு இராசி வாசகர்களே!**

சார்வரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் நீச்சம் பெற்றாலும் சனிபகவானோடு இணைந்து நீச்ச பங்க இராஜயோகத்தை உருவாக்குகின்றார். புத சுக்கிர யோகமும் செயற்படுவதால் இம்மாதம் உங்களுக்கு பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய வாழ்க்கை மலரும்.

### கூட்டுக்கிரக சேர்க்கை

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடமான குடும்ப ஸ்தானத்தில் புதன், வியாழன், சனி, சுக்கிரன் ஆகிய நான்கு கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. புதனோடு சுக்கிரன் சேர்வதால் புத சுக்கிர யோகம் ஏற்படுகின்றது. சனியோடு குரு சேர்வதால் நீச்சபங்க இராஜயோகமும் உருவாகின்றது. எனவே மாதத் தொடக்கத்திலேயே மகிழ்ச்சி தரும் தகவல் வந்து கொண்டேயிருக்கும். குறிப்பாக ஆரோக்கியம் சீராகும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த உயர்வு உண்டு. சலுகைகள் கிடைத்து சந்தோசம் அடைவீர்கள்.

### மகர புதனும், கும்ப புதனும்

மாதத் தொடக்கத்தில் புதன் மகர இராசியில் சஞ்சரிக்கின்றார். வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். பெப்ரவரி 14 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் குடும்ப ஸ்தானத்தில் பலம் பெறும் பொழுது குடும்ப ஒற்றுமை பலப்படும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். மார்ச் 7 ஆம் திகதி கும்ப இராசிக்குப் புதன் செல்வதால் வழக்குகள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றங்கள் கிடைக்கலாம்.




## புதிய வாழ்க்கை மலரும்

### ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் பெப்ரவரி 18 ஆம் திகதி 6 ஆம் இடத்திற்கு செல்கின்றார். பஞ்சம-விரயாதிபதி 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகள் வழியில் நல்ல தகவல் வந்து சேரும். விட்டுப்போன சொந்தங்கள் மீண்டும் வந்திணையும். உடல் நிலையில் இருந்த நோய் அகல மாற்று மருத்துவம் கைகொடுக்கும்.

### மகர குருவின் சஞ்சாரம்

மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் நீச்சம் பெற்று சஞ்சரிப்பது ஒருவழிக்கு நன்மைதான். சனியோடு இணைந்து நீச்ச பங்க இராஜயோக அமைப்பிலும் விளங்குகின்றார். அதேநேரத்தில் பெப்ரவரி 21 ஆம் திகதி குரு அஸ்தமன நிவர்த்தியாவதால், உங்கள் இராசியைப் பொறுத்தவரை மிகச் சிறந்த பலன்கள் கிடைக்கும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். அதிகாரப் பதவியில் உள்ளவர்கள் உங்களுக்கு அறிமுகமாவர். புதிய திருப்பங்கள் ஏற்படும் நேரமிது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஏற்பட்ட சிக்கல்கள் அகலும். பதவி உயர்விற்கான பரிசீலனையில் உங்கள் பெயரும் இடம்பெறும்.

### கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன், பெப்ரவரி 22 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, நடக்காது என்று நினைத்த சில காரியங்கள் திடீரென நடைபெறும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் வந்திணைவர். பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கலாம். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு தட்சிணாமூர்த்தியை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். குடும்பத்திற்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கும். தாய் வழி ஆதரவு உண்டு. உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர்.

'விருப்ப ஓய்வில் வெளிவந்து தொழில் தொடங்கலாமா?' என்று சிந்திப்பீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும். சகப் பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்பூரி சிங்காரம்



**மகரம் இராசி வாசகர்களே!**

சார்வரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி பகவான் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். அவரோடு விரயாதிபதி குருவும் இருப்பதால் விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றங்கள் தொடர்பாக புதிய முடிவு எடுப்பீர்கள். ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்றது. எனவே எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

### கூட்டுக்கிரக சேர்க்கை

உங்கள் இராசியிலேயே நான்கு கிரகங்கள் இணைந்து சஞ்சரிக்கின்றன. குறிப்பாக ஜென்மச் சனி, ஜென்ம குரு, ஜென்ம புதன், ஜென்ம சுக்கிரன் என்று இருக்கும்போது நன்மைகள் நடைபெறுவதில் கொஞ்சம் தாமதம் ஏற்படும். எந்த வேலையையும் ஒருமுறைக்கு இருமுறை செய்யக்கூடிய நிர்ப்பந்தம் உருவாகும். 3, 12 இற்கு அதிபதியான குருவின் ஆதிக்கம் இருப்பதால் உடன்பிறப்புகளின் வழியில் ஒரு பெரும் விரயம் ஏற்படலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள், எதையும் மேலிடத்தைக் கேட்டுச் செய்வது நல்லது.

### மகர புதனும், கும்ப புதனும்

மாதத் தொடக்கத்தில் மகர இராசியில் புதன் சஞ்சரிக்கின்றார். வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். பெப்ரவரி 14 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு 6, 9 இற்கு அதிபதியானவர் புதன். அவர் ஜீவனம் சிறப்பாக இருக்க வழிகாட்டுபவர். தந்தை வழியில் தகுந்த ஆதரவு கிடைக்கும். மார்ச் 7 ஆம் திகதி கும்ப இராசிக்கு புதன் செல்வதால் வாங்கிய கடனை கொடுத்து மகிழ்வீர்கள்.




## எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது

பதவியில் உள்ளவர்கள் பக்கபலமாக இருக்கும் நபர்களிடம் சொல்லி தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வர்.

### ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் பெப்ரவரி 18 ஆம் திகதி பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்குச் செல்கின்றார். எனவே இக்காலத்தில் எதிர்பாராத விதத்தில் சில நன்மைகள் நடைபெறும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி நீங்கள் தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும். தடைப்பட்ட காரியங்கள் துரிதமாக நடைபெறும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும்.

### மகர குருவின் சஞ்சாரம்

மகரத்தில் சஞ்சரிக்கும் குருபகவான் நீச்சம் பெற்றுச் சஞ்சரிப்பது ஒருவழிக்கு நன்மைதான். சனியோடு இணைந்து நீச்ச பங்க இராஜயோக அமைப்பிலும் விளங்குகிறார். அதே நேரத்தில் பெப்ரவரி 21 ஆம் திகதி குரு அஸ்தமன நிவர்த்தியாவதால் உங்கள் இராசியைப் பொறுத்தவரை எதிர்பார்த்த நற்பலன்கள் நடைபெறும். சகோதர சச்சரவுகள் அகலும். 'வாகனங்களை மாற்றலாமா?' என்ற எண்ணம் மேலோங்கும். உத்தியோகத்தில் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும்.

### கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன், பெப்ரவரி 22 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் தனஸ்தானத்திற்கு வரும்பொழுது விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்பு கிட்டும். அதுமட்டுமல்லாமல் கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் அமைப்பும் ஒருசிலருக்கு கைகூடும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் செலவிற்கேற்ற வரவு வந்து சேரும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். பணிபுரியும் பெண்களுக்கு சகப் பணியாளர்களாலும் மேலதிகாரிகளாலும் பிரச்சினைகள் வந்து அலைமோதும். நிதானத்துடன் செயற்படுவது நல்லது.

(தொடரும்...)

## மன்னாரில்...

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் நகரில் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,18)

## யாழ்.மாநகர...

யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனை இலங்கைக்கான சுவிசர்லாந்தின் புதிய தூதுவர் டொமினிக் ஃபேர்கலர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள தூதுவர் பல தரப்பினரையும் தொடர்ச்சியாக சந்தித்துவரும் நிலையில் நேற்றைய தினம் நூலகத்திற்கு சென்று பார்வையிட்டதோடு மாநகர முதல்வரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பில் யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் உள்ளிட்ட சில உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,33)

## பெண் ஒருவரின்...

வல்லைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கட்டைவேலிபல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் மேற்பார்வையாளராக பணிபுரியும் மேற்படி உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த பெண்மணி மோட்டார் சைக்கிளில் யாழ்.நோக்கிச் சென்று கொண்டிருந்த போது வல்லைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த கொள்ளையர்கள் அவரை தள்ளி விழுத்திவிட்டு சங்கிலியை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ம-3,60)

## கடுமையான...

இம்மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளும் சகல பட்டதாரிகளுக்கும் உடல் வெப்பம் பரிசோதிக்கப்பட்ட பின்பே பட்டமளிப்பு விழா மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

மேலும் கை கழுவுதல், சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் மிகவும் இறுக்கமாக பின்பற்றப்படும். பட்டம் பெறும் பட்டதாரிகள் மருத்துவ பீட நுழைவாயில் ஊடாக மட்டுமே நுழைய அனுமதிக்கப்படுவர். (ம-3,18,33)

## தடுப்பூசி பெற்ற...

அஸ்ட்ராஜெனெகாவின் இந்திய தயாரிப்பான கோவிஷீல்ட் தடுப்பூசி பெற்றுக் கொண்ட ஒருசிலர் அதன் பின்னர் கொரோனா தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் காலி மற்றும் கேகாலை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பதில் சுகாதார அமைச்சர் சன்ன ஜெயசுமன தெரிவித்தார்.

தடுப்பூசி பெற்ற மூன்று வாரங்களின் பின்னரும் உடலில் கொரோனாவுக்கு எதிராக எதிர்ப்பு சக்தி உருவாகவில்லை. இது தடுப்பூசி மூலம் மட்டும் வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை உணர்த்தியுள்ளது என்றார். (ம-3)

## எழுச்சிப் பேரணி...

போராட்டத்தில் பங்கேற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞன் சுமார் 6 மணி நேரத்தின் பின் விடுவிக்கப்பட்டார்.

இளைஞனிடம் வாக்குமூலம் பெறப்பட்ட நிலையில் அவரின் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே நேற்று நண்பகல் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இளைஞனின் உறவினர்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையம் முன்பாகக் காத்திருந்தனர். இளைஞனின் தாயார், மகனின் விடுதலையைக் கோரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கதறி அழுதார்.

பருத்தித்துறையில் பேரணி இடம்பெற்ற வேளை இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் இலக்கத்தை வைத்து அவரை பொலிஸார் கைது செய்தனர். அவர் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்று ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது. (ம-3,18)

## உரிய தீர்வை...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"இனவாதம் மற்றும் வெறுப்புப் பேச்சு ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி அரசு செயல்படுகின்றது.

பல்லின சமூகம் வாழும் நாட்டில் ஓர் இனத்துக்கு மாத்திரம் அனைத்து விடயங்களிலும் முன்னுரிமை வழங்கும்போது தேவையற்ற பிரச்சினைகள் தோற்றம் பெறும்.

வளர்ச்சி பெற்றுள்ள நாடுகள் அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து அரசியல் மற்றும் சமூக மட்டத்தில் முன்னேறிச் செல்கின்றன.

இதனை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

எனினும் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண தற்போதைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை" என்றார். (ம-3)

## அகிம்சை பேரணி...

தில் கலந்து கொண்டவர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்களை பொலிஸார் பல்வேறு காரணங்களை கூறி விசாரணைக்கு அழைக்கிறார்கள். அதனால் பல அசௌகரியங்களுக்கு மக்கள் உள்ளாகிறார்கள்.

பொதுமக்கள், மதகுருக்கள், கட்சி பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என அனைவருக்கும் பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி விசாரணைக்கு அழைக்கிறார்கள். இச்செயற்பாடுகள் இந்த நாட்டில் ஜனநாயக இடைவெளியை மேலும் அதிகமாக்கும் என்று தெரிவித்துள்ளார். (ம-3)

## காரைநகரில்...

யில், காரைநகர் - நீலங்காட்டு பகுதியில் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள சுற்றுலா விடுதியை மென்மேலும் விஸ்தரிப்பதற்காகவும் கடற்படை முகாம்களை அமைப்பதற்காகவும் இன்று வெள்ளிக்கிழமை நிலஅளவைத் திணைக்களத்தால் அளவீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே பூர்வீக தமிழ் மக்களின் பெறுமதியான இக்காணிகளை பாதுகாக்க இன்றைய தினம் அனைத்து தரப்பினரும் காரைநகரில் ஒன்றுகூடுமாறு தீவக சிவில் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது. (ம-3,18)

## யாழ்...

டுள்ளனர் என்று மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 8 பவுண் தங்க நகைகள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

தடயங்களின் அடிப்படையில் பாசையூர், குருநகர் மற்றும் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் வசிக்கும் 23 தொடக்கம் 40 வயது வரையிலான மூவர் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் மூவரிடமும் நகை மற்றும் பொருட்களை வாங்கிய குற்றச்சாட்டில் மேலும் இருவரும் கைது செய்யப்பட்டனர். (ம-3,33)

## வரணியில்...

இளம் குடும்பப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் வரணி குடமியன் பகுதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் கமலநாதன் கௌசல்யா (வயது - 23) என்ற இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

வீட்டில் யாருமே இல்லாத நேரம் பார்த்து குறித்த பெண் தூக்கில் தொங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இவருக்கு கடந்த 3 மாதத்திற்கு முன்னர் திருமணம் நடந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-3,60)

## மாட்டுடன் மோது...

இதில் கெருடாவில் தெற்கு தொண்டைமானாறைச் சேர்ந்த 62 வயதுடைய பொன்னர் சந்திரவேல் என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் கடந்த 23ஆம் திகதி தனது வீட்டிலிருந்து கோண்டாவில் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது வல்லைச் சந்தியில் வீதியின் குறுக்கே சென்ற மாட்டுடன் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதன வைத்தியசாலையின் திடீர் மரண விசாரனை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)


தன நிதானய
திகதி - 2021.02.18
சீட்டிழுப்பு இலக்கம் - 439
Q 12 32 52 57

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 18.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2697
Y 32 33 47 59

மஹஜன சம்பத
திகதி 2021/02/18
சீட்டிழுப்பு இலக்கம் 4402
Y 6 2 3 2 3 4

மெகா பவர்
திகதி 18/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0769
O 11 31 54 67 74

செவன
திகதி 18/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 315
F 03 06 19 49

அத கோடிபதி
தினம்: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1198
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 109,498,820
சீட்டிழுப்பு திகதி: 18.02.2021
வெற்றி இலக்கங்கள் 04 62 67 68 U

சனிதா
தினம்: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3528
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,368,361
சீட்டிழுப்பு திகதி: 18.02.2021
வெற்றி இலக்கங்கள் 33 45 62 63 E

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,226,128/=
திகதி: 18.02.2021
வெற்றி வாரம்: 3079
வர்ணம்: கபிலம்
வெற்றி இலக்கங்கள் 09 33 44 49 துலாம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,366,380

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1372
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 18/02/2021
தினம் வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் 69,620,443/=
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் V 06 25 42 52

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 411
திகதி 18.02.2021
வர்ணம் நீலம்
Q 33 42 46 8
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 10,000,000
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

# உருமாறும் கொரோனா வைரஸ் தொடர்பில்

# தொற்று நோயியல் பிரிவு அரசை முன்னெச்சரிக்கை செய்யவில்லை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு




(கொழும்பு)

**உருமாறி பரவும் கொரோனா வைரஸ் தொடர்பான அரசாங்கத்திற்கு தெளிவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வழங்கத் தவறியமைக்கு தொற்று நோயியல் பிரிவே காரணம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.**

நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அச்சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில் பிரித்தானியா மற்றும் தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட புதிய மாறுபாடு கண்டறியப்பட்டுள்ள நிலையில், எதிர்காலத்திற்கான தடுப்பூசி திட்டத்தை வெளியிடுமாறு தொற்று நோயியல் பிரிவிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

கொரோனா வைரஸை ஒரு அரசியல் பிரச்சினையாக மாற்ற அரசாங்கமும் எதிர்க்கட்சியும் முயற்சிப்பதாக குற்றம் சாட்டிய வைத்தியர் ஹரித அலுத்கே, இதன் காரணமாக சுகாதார நிபுணர்களின் செயற்பாடுகள் தடைப்படுவதாகவும் சுட்டிக் காட்டினார். (ம-03)

Architectural CAD Centre[Jaffna-Vavuniya-Colombo]
[Personal-Group-Visiting Classes]
(C-1472)
2D-Drawing 3D-Modeling
Auto CAD
Lecturer By:Mr.K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD(2D Drawing&3D Modeling)
University of Peratheniya.
Cert.in Auto CAD(Advance 3D-Modeling)
University of Moratuwa.
Cert.in Auto CAD(2D Drawing&3D Modeling)
Open University of Sri Lanka.
Cert.in Auto CAD(2D &3D)(1stClass)
University of Colombo.
Link:
077-5116320
071-8617972
[Civil & Mechanical]

விற்பனைக்கு
உரும்பிராய் தெற்கில்
2 கடைகள்
விற்பனைக்குண்டு.
தொடர்பு (5828)
077 002 5256

வேலை வாய்ப்பு
இலங்கையின் முன்னணி நிதி நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக பெண் உத்தியோகத்தர் தேவை.
தகைமை :- க.பொ.த உயர்தரம் மற்றும் ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.
வயதெல்லை : 20 - 35 வயதுக்குட்பட்டவர்.
(C-1470)
074 084 6647

FALC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச் Courses (DELF A1, A2, B1, B2)
Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma
V. ஜெகன் (Trained in France) (C-1455)
19, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781
23\2, சோமசுந்தரம் அவெனியு, சுண்டுகுளி. 0779789456 / 0212219497 கச்சேரி Fuel Station அண்மையில்
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் Work / Student Visa கான IELTS வகுப்புக்கள்.

### முல்லையில் ஒருவர் கைது

பெறுமதியான இரண்டு கஜமுத்துக்களுடன் மகியங்கனையைச் சேர்ந்த நபர் ஒருவரை முல்லைத்தீவில் வைத்து விசேட அதிரடிப் படையினர் நேற்று கைது செய்துள்ளனர்.

யானைத் தந்தத்திலிருந்து எடுக்கப்படும் குறித்த கஜமுத்து விற்பனை செய்வதற்காக முல்லைத்தீவிற்கு கொண்டு வந்த வேளை விசேட அதிரடிப்படையினர் சந்தேகத்தின் பேரில் குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

பெறுமதியான இரண்டு கஜமுத்துக்களுடன் மகியங்கனையைச் சேர்ந்த 27 வயதுடைய நபர் ஒருவரையே விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (மு-03)

## கண்ணீர் அஞ்சலி



அச்சுவேலியில் அமைந்துள்ள எமது சூர்யா மருந்தகத்தில் ஆரம்பகால விற்பனையாளராக கடமையாற்றி தற்பொழுது எமது கிளை நிறுவனமான சூர்யா மருந்தகத்தில் (புத்தூர்) கடமையாற்றும் திருமதி **சி. றோசாதேவி** அவர்களின் அன்புத் தந்தை

**திரு. கனகசபை பரராஜசிங்கம்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(5833)

சூர்யா மருந்தகம்
அச்சுவேலி - புத்தூர்

உரிமையாளர், மருந்தாளர்கள்,
சக பணியாளர்கள்.

2020 O/L
மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு
வரலாறு
ஆசிரியர் R.S. சந்திரன்
காலம் :- 20, 21ஆம் திகதிகளில்
(காலை 8.00 மணி முதல் 1.00 மணி வரை)
குறிப்புகள் :
- ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்துகொள்ளமுடியும்,
- எதிர்பார்க்கை வினாக்கள் விடைகளுடன் கையேடுகளாக வழங்கப்படும்,
- இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையில் குறித்துக் காட்டப்படும்,
- சுகாதார விதிமுறைகளை பின்பற்றி மாணவர்கள் கலந்து கொள்ளவும்,
- அனுமதிக்கட்டணத்தைச் செலுத்தி கருத்தரங்கில் பங்கு பற்ற முடியும்.
(5832)
றோயல் அக்கடமி
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 077 596 3387 நிர்வாகம்

அண்ணா EXPRESS
விரைவும் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
075 3305500
(C-1418)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி
(C-1456)
0768226240 DHL

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.